சுடர் 16 கதிர் 4

# மிட்ஸ் ஐக்கிய சுடர்

அக்டோபர் - டிசம்பர் 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்

மும்மாத இதழ்



## சமூக அக்கறையில் மலரும் மனித மாண்பு


Prop.: Johnson
TASTE FOOD
CATERING
KREUPASANAM MATHA
Fathima Nagar. 04651-240419 94432 09989
TASTE FOOD
OUTDOOR CATERING
Mob : +91-94432 09989


Best Compliments from.....
Cell : +91 81908 57379
+91 95661 31014
Chennai Manna
Sweet & Bakery
S.F. PLAZA,
ATTOOR.
கேக்வகைகள்
பிஸ்கட் வகைகள்
திருமண நாள் கேக்
ஸ்வீட்ஸ் வகைகள்
பிறந்த நாள் கேக்
வெஜிடபிள் பப்ஸ்
கார வகைகள்
நியூ இயர் கேக்
முட்டை பப்ஸ்
ஸ்பெஷல் ஆர்டர்கள் உடனுக்குடன் சூடான சுவையாக செய்து தரப்படும்.
Orders undertaken with love and care Prop : J. Kumar.

ஆதரவாளர்கள்

**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**

தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.**

இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்

**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு

**திருமதி. விஹிதா S.**

**திருமதி. வினிதா ராணி T.**

**திருமதி. சசிகலா T.**

**திருமதி. சுகுமாரி R.**

**திருமதி. சஜிதா S.**

**திருமதி. றீனா P.**

**செல்வன் ஷாபின் S.**

**செல்வன் டெல்பின் P.**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்

**திருமதி. V. சுனி**



வெளியீடு

**மிட்ஸ்,**

இடைவிளாகம் - கழுவன்திட்டை

குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690

Email : mids.marthandam@gmail.com

Website : mids.org.in

அச்சிட்டவர்

**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**

நாகர்கோவில்

**தனிச்சுற்றுக்கு மட்டும்**





# உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1. | ஆயரின் ஆசியுரை | 2 |
| 2. | இயக்குநர் கடிதம் | 3 |
| 3. | இவர்கள் மதிப்பும் மாண்பும் பெற்றிட . . . | 4 |
| 4. | குழந்தைப் பருவம் | 7 |
| 5. | பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பும் வரதட்சணைக் கொடுமையும் : சட்டம் இருந்தும் தயக்கம் ஏன்? | 9 |
| 6. | தனி மனித சமூக அக்கறை | 11 |
| 7. | குழந்தைப் பருவ நிகழ்வுகள் | 13 |
| 8. | குழந்தைப் பருவம் | 14 |
| 9. | மிட்ஸ் நிறைவாழ்வு சங்கம் | 14 |
| 10. | பயணங்களின் பாதையில் வெற்றி அனுபவங்கள் | 15 |
| 11. | விருட்சம் | 16 |
| 12. | மிட்ஸ் தளிர்கள் உலகம் | 16 |
| 13. | கோல்பிங் தினவிழா | 17 |
| 14. | மிட்ஸ் மரியன் இயக்கம் | 18 |
| 15. | மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டம் | 18 |
| 16. | பிற நிகழ்வுகள் | 19 |
| 17. | மிட்ஸ் அடுத்தகட்ட வளர்ச்சிப்பணிக்கான கலந்தாய்வு கூடுகை | 20 |
| 18. | கைம்பெண்களின் பாதுகாப்பிற்கு . . . | 20 |
| 19. | திருமதி. ஷைனி கனவு இல்லம் தேடி . . . | 21 |
| 20. | ஐக்கியச்சுடர் இதழ் வாசித்து விடை எழுதும் போட்டி | 23 |


சமூக அக்கறை கொண்ட மனம்தான் நல்ல தலைமையை உருவாக்கும்.

# ஆயரின் ஆசியுரை



கிறிஸ்துவின் அன்பு நிறை இறைமக்களே!

கடவுள் மனிதரானார் என்பது மாபெரும் அதிசயம். இறைமகன் இயேசு மனுவுருவெடுத்தார். மனிதப் பண்பை ஏற்றுக்கொண்டார். மனிதராக மாறினார். எனவே அவரது பிறப்புத் திருவிழாவை மனிதராதல் திருவிழா என அழைக்கிறோம். மனிதராதலால் இயேசு கிறிஸ்து ஒரே நேரத்தில் கடவுளும் மனிதனுமானார். காலத்தின் நிறைவில் கன்னியிடமிருந்து பிறந்தவர். வானகத்தோரையும் வையகத்தோரையும் மகிழ்வித்தார். விண்ணோரையும் மண்ணோரையும் ஒப்புரவாகச் செய்தார். மனித குலத்தின் மீட்புக்காக விண்சாய்த்து இறங்கி வந்து மனிதரானார். குழந்தையாகத் தோன்றிய அவர் தந்தையின் ஒரே மகனாவார். ஒளிரும் சூரியன், கன்னியிடமிருந்து பிறந்தவர், அதிசயக் குழந்தை, தெய்வீகக் குழந்தை, உலகின் மீட்பர், கடவுளின் ஆட்டுக்குட்டி, மானிட மகன், தந்தையின் ஒரே மகனாகவும், மரியாவின் தலைமகனாகவும் வந்து பிறந்தவர். இந்த தெய்வீகக் குழந்தை யோசேப்பின் மகனென அழைக்கப்பட்டது.

கடவுளின் மனிதராதல் உலகின் அமைதியையும் எதிர்நோக்கையும் ஒன்றிப்பையும் தருகிறது. முதல் மனிதனாகிய ஆதாமின் பாவத்தால் இழந்துபோன இறைமனித உறவை மீண்டும் நிறுவ இறைமகன் இயேசு உலகில் உதயமானார். விண்ணுக்கும் மண்ணுக்குமிடையேயிருந்த இடைவெளி இயேசுவின் பிறப்பால் இல்லாமல் போனது.

எதற்காக இயேசு இந்த உலகிற்கு வந்தார் என்ற கேள்விக்கு திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் அற்புதமான பதில் மொழியைத் தருகிறார். "கடவுளின் திருமுகத்தை இந்த தரணிக்குக் காட்ட கடவுள் மனிதரானார். இயேசுவின் திருமுகத்தில் கடவுளின் முகத்தை பார்க்கிறோம். இயேசு ஒளியிலிருந்து உதித்த ஒளியானவர்". இந்த திருமுகத்தின் மற்றொரு வடிவத்தை (the other face of God) ஏழை எளிய மக்களில் பார்க்கிறோம். இந்த எளியோர் முகத்தில் இயேசுவைக் காண கிறிஸ்துமஸ் நம்மை அழைக்கிறது. உலகிற்கு ஒளியாக வந்த இயேசுவை அலங்காரங்கள் செய்து அர்த்தமுள்ள வகையில் கொண்டாட முடியுமோ? பொய்யும் புரட்டும் ஏமாத்தும் தொழில்நுட்பக் கருவிகள் வாயிலாக தலைவிரித்தாடும் இச்சமூகத்தில் நேர்மை என்பது சாத்தியமோ? இதயத்தில் தூய்மையுள்ளோர் இறைவனைக் காண்பர். நேர்மையில்லாமல் இதயத் தூய்மை அடைய முடியுமோ? எங்கே நம் நேர்மை? உலகத்தின் ஏழைகளுள் ஏழைகள் நம் நாட்டில் உள்ளனர்.

கிறிஸ்துமஸ் கிறிஸ்து நிகழ்வை ஆய்வு செய்து மூளையை மகிழ்விக்கும் அறிவுச் செயலில் ஒதுங்குவது அல்ல. மேலும் இத்திருவிழா கிறிஸ்து பிறப்பு நிகழ்வை நம் உள்ளங்களில் ஊடுருவச் செய்து இறைவனோடு நம்மை ஒன்றிணையச் செய்யும் அற்புத விழா. கிறிஸ்து நம்மில் பிறக்கின்றவிழா.

குழந்தை இயேசுவின் மறுமுகங்களாகிய சமூகத்தின் விளிம்புநிலையில் கிடப்போரை சமூகத்தின் மத்தியத்திற்கு கொண்டு வருவோம். நேர்மையென்னும் புனிதத்தை அடைந்து இறைமகன் இயேசுவின் திருமுகம் காண்போம். கிறிஸ்துமஸ் விழாவுக்கு தகுந்த ஆயத்தம் செய்ய இந்த நோன்பு காலம் உதவட்டும். இறைவார்த்தைப் பகுதிகளை தியானவாசிப்பு செய்து கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகளை நினைவாக்கம் செய்வோம். கிறிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் பகிர்ந்து கொள்கிறேன்.

ஆசீருடன்,<br>
**மேதகு ஆயர் Dr. வின்செண்ட் மார் பவுலோஸ்**<br>
தலைவர், மிட்ஸ்

பிறர் நலனில் அக்கறை கொண்டால் தான் உண்மையான மனிதன் எனப்படுவான்.

# இயக்குநர் கடிதம் . . .



திருச்சி நகருக்கு வெளியே கிராமத்தில் தமிழ் வழிக்கல்வி பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவி, கிராமத்துக் குழந்தைகள் ஆங்கிலவழிக் கல்விக்கு இணையான கல்வியை, மேலான ஒழுக்கத்தை கற்றுத்தருகிறார் அரிமாவளவன் என அறியப்படும் பணியாளர். அவருடன் துறவறசபையைச்சார்ந்த சகோதரிகளும் பணியில் இணைகின்றனர். அங்கே பயின்ற மாணவர்களும் உயர்கல்விப்பெற்று அப்பள்ளிக் கூடத்திலேயே திரும்ப வந்து பணியாற்றும் சூழலையும் காணமுடிகிறது. தன்னார்வலராக குடும்பமாக வந்து, கிராம மக்கள் நலன்கருதி உழைப்பதைக் காணும்போது உள்ளம் நெகிழ்கிறது. சமூக அக்கறை கொண்ட மனிதர்கள் தங்களை சமூகத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கும்போது, இளந்தலைமுறையினரை எளிதாக பொதுத்தேவைகளுக்கு ஈர்த்துக் கொள்கின்றனர். ஏழு வருடங்கள் துறவற சபையில் கல்விபெற்ற மாணவர் ஒருவர், தற்போது கணினி மற்றும் தகவல்பாதுகாப்புச் சேவையை 65 பள்ளிக்கூடங்களுக்கு இலவசமாகச்செய்து வருகிறார். கல்வி பயிலும் பல மாணாக்கருக்கு தனது ஊதியத்திலிருந்து செலவழிக்கிறார். நமது குமரி மாவட்டத்திலும் இத்தகைய சேவைப்பணிகளை முன்னெடுப்போர் பலரைக் காண இயல்கிறது. ஆனாலும் வெகுவாக, இளந்தலைமுறையினரின் கவனத்தை ஈர்த்து, மக்கள்பணிசெய்யும் வலுவான மனிதர்களாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உருவாக்கத் துணிவது குறைவாகத்தான் இருக்கிறது. சமூகப்பணி நிறுவனங்களில் கூட, மக்கள் அவற்றை சேவை பெறும் இடமாக மட்டுமே பார்ப்பதால், இணைந்து சேவை செய்வதும், தன்னார்வல பணிபுரிவதும் அரிதாகிறது.

இயேசு பிறப்பின் கிறிஸ்துமஸ் விழாவில் சமூக அக்கறையை குறித்து உரையாடுகிறோம். கடவுள் தமது அன்பு மக்கள் சமூகத்திடம் கொண்ட அக்கறை தான் இயேசுவை உலகிற்கு அனுப்பியது என புரிந்துகொள்கிறோம். மனிதராக வாழ்ந்த அவர் மானிடச்சமூகம் பல்வேறு பாகுபாடு களால் நிறைந்து, அடித்தட்டு மக்கள் பல்வேறு புறக்கணிப்புகளுக்கு ஆளாகி, மனித மாண்பை இழந்த நிலையில், கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே என்ற நற்செய்தியை அறிவிக்கிறார்.

மக்கள் இணைந்தே சமூகத்தை உருவாக்குகின்றனர். மக்களுக்கு அவரவர் தேவையை அடிப்படையில் அவர் சார்ந்திருக்கும் சமூகம் வழங்கவேண்டும். மனிதர் கட்டமைக்கும் அரசுக் குழுக்கள் அவற்றைத் திட்டமிட்டு நிறைவுசெய்ய வேண்டும். அது கிராம நிர்வாகம் முதல் மாவட்டம், மாநிலம், நாடு, நாடுகள் ஒன்றிணைந்த ஐக்கியநாடுகள் சபை போன்ற நிர்வாக அமைப்புகள் அனைத்திலும், மனிதர் தமது அடிப்படைத்தேவைகளை நிறைவுசெய்து கொள்ள வேண்டும்.

ஆகவே, சகோதர சகோதரிகள் என்ற நிலையில் அக்கறை கொள்வோம். சமூக வளர்ச்சிக்கு உண்மையாக இயங்கும் அமைப்புகளில் நம்மை ஆர்வத்துடன் ஈடுபடுத்துவோம்; துயருறும் மக்களுக்கு தோள்கொடுப்போம். திருஅவை வழிநடத்தும் பங்குகளோ, அதன் ஏனைய சமூக அமைப்புகளோ அல்லது அரசு அமைப்புகளோ ஏதேனும் ஒன்றில் நமது ஈடுபாடு இருந்தால் மட்டுமே நாம் விரும்பும் அமைதிச் சமூகம் நனவாகும்.

அனைவருக்கும் இனிய கிறிஸ்துபிறப்பு புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**அருட்தந்தை. முனைவர் ஜெரோம் C.**
இயக்குநர் - மிட்ஸ்

நான் என்பதைக் கடந்து நாம் எனச் சிந்திப்பதே சமூக அக்கறையின் தொடக்கம்.



# இவர்கள் மதிப்பும் மாண்பும் பெற்றிட....

**S. பரிமள செல்வி,** B.Sc., B.Ed.,
Diploma in Counselling
சமூக ஈடுபாட்டாளர்



'இவர்கள்' யார்? கைம்பெண்களும் கைவிடப்பட்ட பெண்களுமே இவர்கள்.

வாழ்வதற்காகப் போராடுகிறோம், போராடுவதற்காக வாழ்கிறோம் - இவ்வரிகளில் பொதிந்திருக்கும் வாழ்வியல் தத்துவம் மிகவும் உண்மையானது. இது, வாழ ஆசைப்படுகின்ற அனைவருக்குமே பொருந்தும் எனினும் கைம்பெண்களுக்கும் கைவிடப்பட்ட பெண்களுக்கும் மிகவும் பொருந்தும். ஏனெனில், இவர்களில் பெரும்பாலானோருக்கும் வாழ்க்கையே போராட்டம் மிக்க போர்க்களம் போன்றதாகத்தான் உள்ளது.

அதீதக் குடிப்பழக்கம், விபத்து, நோய், மதக் கலவரங்கள், ஊர்க்கலவரங்கள், சாதிச் சண்டைகள், குடும்பச் சண்டைகள், போர்கள் போன்றவற்றால் ஆண்கள் இறக்க நேரிடும் போது, அவர்களது மனைவியர் கைம்பெண்கள் ஆகின்றனர். சந்தேகத்தாலும் பிற பெண்களோடு கொண்ட தொடர்புகளாலும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் உள்ளனர். இந்தப் பெண்கள் தனித்து வாழ வேண்டியிருக்கிறது. சமூகம் தரும் அழுத்தம் கூடுதல் சுமையாக இருக்கிறது.

### உலக கைம்பெண்கள் தினம்

ஐக்கிய நாடுகள் சபை இவர்கள் மீது அதிகக் கவலையும் கரிசனையும் கொண்டுள்ளது. அதன் அடையாளமாகவே உலக கைம்பெண்கள் தினம் ஜூன் 23ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை இதை 2010-ஆம் ஆண்டு டிசம்பர் 21 அன்று ஏற்றுக்கொண்டு 2011 முதல் இத்தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த நாள் கைம்பெண்களின் உரிமைகளை நினைவூட்டுவது. மட்டுமல்லாமல் கைம்பெண்கள் சந்திக்கின்ற ஏழ்மை, சமூகத்தில் பாகுபாடு காட்டுதல் போன்ற பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காகவும் அமைந்துள்ளது.

### சவால்கள் நிறைந்த வாழ்க்கை

கைம்பெண்களின் வாழ்க்கை சவால்கள் நிறைந்தது. சந்திக்கும் முக்கிய சவால்கள்

**1. பொருளாதார ஏழ்மை** - இந்தியாவில் கிராமப்புற கைம்பெண்கள் 70 விழுக்காட்டினர் ஒய்வூதியம் பெறுவதில்லை என்கிறது புள்ளிவிபரம். காரணம் அவர்களுடைய கணவர்கள் அரசு ஊதியம் பெறும் வேலைகளில் இருந்திருக்கமாட்டார்கள். கூலி வேலை பார்ப்பவர்களாக, அன்றாடங்காய்ச்சிகளாக இருந்திருப்பார்கள். எனவே, அவர்களுடைய இறப்புக்குப்பின் குடும்பம் மிகப்பெரிய அளவில் பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும் நிலை உள்ளது. இவர்களில் பலர் வேலைக்குச் சென்றாலும், ஒற்றை நபரால் போதிய வருமானம் ஈட்ட இயலவில்லை. ஏனெனில் பெண் என்ற ஒரு காரணமும், இவர்களுக்கு வேறு போக்கிடம் இல்லை, குறைவாகக் கொடுத்தாலும் இவர்கள் வந்தே தீருவர் என்ற எண்ணமும் அவர்களின் ஊதியத்தைக்

பிறருக்காக வாழும் ஒரு மனிதன் தன்னை உயர்த்திக்கொள்கிறான்.

குறைத்து கொடுக்க வைக்கிறது. அவர் களுக்குக் கிடைக்கின்ற குறைந்த ஊதியம் அத்தியாவசியச் செலவுகளுக்கும் பிள்ளை களின் படிப்புச் செலவுக்கும் மருத்துவச் செலவுக்கும் போதுமானதாக இல்லை. தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் போன்றவை ஓரளவு தாங்கிப் பிடித்தாலும், பெண் பிள்ளைகளின் திருமணச் செலவு, வீடு கட்டுதல் போன்ற பெரிய செலவு களை அவர்களால் எதிர்கொள்ள முடிவதில்லை.

**2. சொத்துரிமை மறுப்பு** - இந்தியாவில் வாரிசுரிமைச் சட்டம் இருந்தாலும், கணவனை இழந்த பிறகு குடும்பத்தாரிடமிருந்து வரும் அழுத்தம், சரியான ஆவணமின்மை போன்ற காரணங்களால் 60 விழுக்காடு கைம்பெண்கள் தங்கள் சொத்துகளை இழக்கின்றனர் என்பது தரவுகள் கூறும் உண்மை. இதனால் அவர்கள் தங்கள் வீடுகளை இழந்து தெருவோர வாழ்க்கைக்குத் தள்ளப்படுகின்றனர்.

**3. சமூகம் தரும் அழுத்தம்** - இந்தியா போன்ற பழமைவாத, ஆணாதிக்கச் சமூகங்களில் கைம்பெண்கள் அமங்கலமாகக் கருதப்படும் நிலை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதனால் நிறைய மூடநம்பிக்கைகளை இச்சமூகம் உருவாக்கி வைத்திருக்கிறது. திருமணம் போன்ற மங்களகரமான சுபகாரியங்களில் அவர்கள் பங்கேற்கத் தடையும் உள்ளது. இதனால் அப்பெண்கள் எப்போதும் மக்கள் கூடுகின்ற இடங்களில் தனியாக ஒதுங்கியிருக்கவே விரும்புகிறார்கள். கூட்டத்தில் வந்து நின்று அசிங்கப்படவும் அவமானப்படவும் அவர்கள் தயங்குகிறார்கள். கொடுமையிலும் மிகப் பெரிய கொடுமை என்னவெனில், தான் பெற்ற பிள்ளைகளின் திருமணம், தான் கஷ்டப்பட்டுக் கட்டிய வீட்டின் புதுமனை புகுவிழா போன்ற தன் வீட்டு சுபகாரியங்களில் கூட தான் முன்நின்று நடத்த இயலாத நிலை.

கணவன் இறந்துவிட்டால் அப்பெண்ணுக்கு இந்தச் சமூகம் எந்தவிதமான அந்தஸ்தையும் அங்கீகாரத்தையும் தருவதில்லை. எல்லா வற்றிலும் ஆண்களைச் சார்ந்து வாழ்வதையே பெண்களின் இலக்கணமாகக் கற்பிக்கும் இந்த ஆண் மையச் சமூகம் கைம்பெண்களைச் சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளிக் கொடுமைப் படுத்துகிறது. கிட்டத்தட்ட எல்லா உரிமை களையும் பறித்து வாழ்க்கையைக் கசந்துபோக வைக்கிறது. நல்ல உடை உடுத்தவோ, அலங்காரம் செய்யவோ, பூ வைக்கவோ, பொட்டு வைக்கவோ சுதந்திரம் இருக்கிறதா என்றால் கேள்விக் குறியாகவே உள்ளது. அதனால்தான் அப்படிச் செய்யும் பெண்களைத் தவறாகப் பேசுகின்றனர். உரிமை இல்லாததால்தான் பூ, பொட்டு வைக்கும் உரிமையை யாராவது கொடுக்கும்போது அப்பெண்கள் நெகிழ்ந்து போகின்றனர்.

**4. உளவியல் தாக்குதல்** - தன்னுடைய வாழ்க்கைத் துணையை இழந்ததால் மிகப்பெரிய ஆதரவை அகத்தளவிலும் புறத்தளவிலும் இழந்து நிற்கும் கைம்பெண்களைத் தாங்கிப் பிடிப்பதற்குப் பதிலாக, தகாத பார்வைகளாலும் வார்த்தைகளாலும் செயல்களாலும், பாகுபாடான பழக்க வழக்கங்களாலும் துன்புறுத்தி, மனவலிமையை இழக்க வைக்கிறது. சமூகத்திலுள்ள அனைவரின் பார்வையும் கழுகுப்பார்வையாய் இவர்கள் மீது திரும்புகிறது. எல்லாருக்கும் பதில் சொல்ல வேண்டி யிருக்கிறது. சமூகத்திலுள்ள அனைவரின் பார்வையும் கழுகுப்பார்வையாய் இவர்கள் மீது திரும்புகிறது. எல்லாருக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

மன அழுத்தம், தனிமை, பாதுகாப்பின்மை போன்றவற்றால் அலைக்கழிக்கப்படும் இப்பெண்களில் சிலர் தற்கொலை செய்யவும் தூண்டப்படுகின்றனர். மறுமணம் செய்யும் பெண்களைப் பற்றி இழிவாகப் பேசுதல் சமூக வழக்கமாக இருப்பதால் அவர்கள் மறுமணத் தைப் பற்றி யோசிக்கவே பயப்படுகின்றனர். அதனால், அவர்களது மீதி வாழ்க்கை பட்டுப்போன மரமாகவே காட்சியளிக்கிறது.

**5. வன்முறை, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகுதல்** - கணவனை இழந்த பெண்கள் மிகவும் பலவீனமானவர்களாவும், கேட்பதற்கு ஆளற்றவர்களாகவும் கருதப்படுகிறார்கள். எனவே, எளிதாக வன்முறைகளுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் ஆளாகிறார்கள். பல கைம்பெண்களின் பெண் குழந்தைகளும் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். இது அவர்களுக்கு மிகப் பெரிய கவலையையும் அச்சத்தையும் உண்டாக்குகிறது.

இன்னும் பலப்பல பிரச்சனைகளையும் இடையூறுகளையும் பட்டியலிட முடியும்.

பிறர் துயர் தன் துயராக உணர்வதே சமூக அக்கறை.

எனவேதான், இவர்கள் சிறப்புக் கவனத்துக் குரியவர்கள் ஆகிறார்கள். நாம் அன்புப் பணியாற்றுவதற்கு அதிக வாய்ப்பைத் தரக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

**நலவாரியமும் தனிச்சட்டமும்**

தமிழக அரசும் இவர்கள் மீது சிறப்புக் கவனம் கொண்டுள்ளது. 2022 செப்டம்பர் மாதத்தில் தமிழக அரசு, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் அமைத்து அரசாணை வெளியிட்டது. இந்த வாரியம் சுயதொழில் தொடங்க மானியம் வழங்குதல், நிதி உதவி அளித்தல் மற்றும் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற பணிகளைச் செய்கிறது. இவ்வாரியத்தில் எல்லா கைம்பெண்களும் கைவிடப்பட்ட பெண்களும் முதிர்கன்னிகளும் ஆதரவற்றோரும் உறுப்பினராகப் பதிவு செய்து, பலன்களைப் பெறலாம்.

இவர்களது சமத்துவ உரிமைகளை நிலைநாட்டும் நோக்கத்துடன், இவர்களுக் கென்று தனிச்சட்டமும் கொண்டுவரப்பட வேண்டும். ஏனெனில் இப்பெண்களின் வாழ்க்கை மற்ற பெண்களின் வாழ்க்கையைப் போன்றது அல்ல. மிகவும் இழிவுபடுத்தப் படுகின்ற நிலை. எனவே, தனிக்கவனமும் தனிப்பராமரிப்பும் பெற வேண்டியவர்கள் இவர்கள்.

**இவர்களின் வாழ்வு மேம்பட**

இவர்களின் வாழ்க்கை நிலை எல்லா நிலைகளிலும் மேம்பட வேண்டும். இவர்கள் மாண்புடனும் மதிப்புடனும் சமூகத்தில் வாழ வேண்டும். அதற்கு நலவாரியங்கள் மட்டும் போதாது. அவர்களது பொருளாதாரம் மற்றவர்களைச் சார்ந்திருக்கும் ஒன்றாக இல்லாமல், தற்சார்பு பொருளாதாரமாக வேண்டும். அதற்குச் சொந்த வீடும் நல்ல வருமானம் தரும் வேலையும் தேவை. அதற்கு ஒன்றிய அரசும் மாநில அரசும் பொறுப்பேற்க வேண்டும். அரசுகளை நிர்ப்பந்திக்க வேண்டியது பொதுச்சமூகத்தின் கடமை. தொடர்ந்து கோரிக்கை வைப்பதும் தேவைப்படும் போது போராடிப் பெறுவதும் கைம்பெண்கள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் தலையாயக் கடமை. நமக்காக வேறு யாராவது பேசி பெற்றுத் தருவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தால் காலத்தாமதமாகும். பாதிக்கப் பட்டவர்களே அல்லது தேவையிலிருப்பவர்களே போராட்டத்தில் இறங்கினால்தான் எல்லாம் விரைவில் கைக்கூடும். "நமது வலியும் வேதனையும் மற்றவர்களுக்குத் தெரியாது" என்ற புரிதலுடனும் "நம் கையே நமக்கு உதவி" என்ற உணர்வுடனும் களத்தில் இறங்க வேண்டியது கைம்பெண்களின் கடமை.

இவர்களை இயக்கங்களாக ஒருங்கி ணைத்து அரசுக்கு கவன ஈர்ப்பு கொடுக்கும் வகையில் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது சமூக ஆர்வலர்கள் மற்றும் முற்போக்கு இயக்கங்களின் கடமை.

**மதிப்பும் மாண்பும் பெற**

இந்தச் சிறப்புப் பெண்களை இழிவாகப் பார்க்கின்ற, இழிவாக நடத்துகின்ற இன்றைய சமூக அமைப்பில் மாற்றம் கொண்டு வந்தால்தான் இவர்களுக்கான மதிப்புக்கும் மாண்புக்கும் உத்தரவாதம் இருக்கும். எனவே, நம் எல்லோருடைய மனங்களிலும் மண்டிக் கிடக்கின்ற பெண்களுக்கு எதிரான எண்ணங் களும், கலாச்சாரம் என்கிற பெயரில் சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்ற பெண்களுக்கு எதிரான பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும் மாற்றம் காண வேண்டும். அவர்களுடைய மறுமணத்தை ஆதரிக்கும், அங்கீகரிக்கும் நிலையும் உருவாக வேண்டும். இதற்கு, இவர்கள் மேல் அக்கறை கொண்ட எல்லாரும் உழைக்க வேண்டும். மாற்றம் நிச்சயமே.

*தேடும் விடியல் தூரமாய் இல்லை.*

## மனிதநேயம்

உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்து சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டோடு நாட்டை இணைத்து மேலே
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்
ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களை
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
என்குலம் ஏற்றுணை தன்னுடன் ஒட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
மானிட சமுத்திரம் நானென்று கூவு



பிறரை மதிப்பது, சமூக ஒற்றுமையின் அடையாளம்.




**ஒவ்வொரு குழந்தையும் ஒரு மலர். அதை மலரச் செய்வதே நமது கடமை.**

- டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாம்

குழந்தைப்பருவம் என்பது மனித வாழ்க்கையின் மிகவும் இனிமையான, அப்பாவியான கனவுகள் நிறைந்த ஒரு கட்டமாகும். அந்த வயதில் உலகம் மிகவும் புதியதாகவும் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய அனுபவமாகவும் இருக்கும். ஆனால் இன்றைய காலத்தில் குழந்தைகள் சந்திக்கும் சூழல்கள் அவர்கள் மனநிலைக்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சில நேரங்களில் அவர்கள் எதிர்நோக்கும், பிரச்சனைகள் அவர்களின் சிறு மனதில் பெரிய சுமைகளாக மாறுகின்றன.

**I பலங்கள் - குழந்தைகளின் உள் சக்திகள்**

ஒரு குழந்தையின் மனம் ஒரு கண்ணாடி போன்றது, அதில் ஒளி ஊற்றினால் அது உலகத்தையே பிரகாசமாக்கும்.

1. தன்னம்பிக்கை மற்றும் தைரியம்

இன்றைய குழந்தைகள் தங்கள் எண்ணங்களை தெளிவாக வெளிப்படுத்துகின்றார்கள். அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி விழிப்புணர்வோடும் தைரியமாகவும் சிந்திக்கின்றார்கள். சிறிய வயதிலிருந்தே நான் இதை செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் இருப்பது அவர்களின் மிகப்பெரிய வலிமை.

“சிந்தனை மாறினால் உலகம் மாறும்”.

2. கற்றல் ஆர்வம்

புதிய விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் குழந்தைகளின் மிகப்பெரிய வலிமை அவர்கள் தோல்வியைக் கண்டு பயப்படாமல் மீண்டும் முயலலாம் என்ற மனநிலையுடன் செயல்படுகிறார்கள்.

3. நேர்மையும் உண்மையும்

குழந்தைகள் பொய்யில்லாமல் மனதிலிருப்பதை நேராகச் சொல்வார்கள். இந்த நேர்மைதான் அவர்களின் இயல்பான வலிமை. அது வளர்ந்தபின் நற்பண்புகளாக மாறும்.

**II பலவீனங்கள் - அவர்கள் காண விரும்பும் உலகம்**

குழந்தைகள் மிகவும் எளிய ஆனால், ஆழமான விஷயங்களை எதிர்பார்க்கின்றார்கள்.

1. அன்பும் மதிப்பும்

குழந்தைகள் விரும்புவது பெரியவர்கள் அவர்களிடம் அன்பாகவும், மதிப்புடன் பேச வேண்டும் என்பதே.

2. சமத்துவம் மற்றும் நியாயம்

ஆண் - பெண், பணக்காரர் - ஏழை, நிறம், மதம் என்ற வேறுபாடுகள் இல்லாத ஒரு சமத்துவமான சமூகத்தை அவர்கள் கனவு காண்கின்றார்கள்.

3. பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை

குழந்தைகள் தங்களை பாதுகாப்பாக உணர வேண்டும். குடும்பம், பள்ளி, சமூகம் எங்கும் நம்பிக்கையுடன் வாழும் சூழலை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

“குழந்தைகளின் குரலைக் கேளுங்கள் - அதில் எதிர்காலம் பேசுகிறது.

குழந்தை பருவம் என்பது வாழ்நாளின் அடித்தளம். அந்த அடித்தளம் வலிமையாக

இருந்தால் மனிதனின் வாழ்க்கை உயரமாக வளரும். அவர்களின் கனவுகளை மதிக்காத ஒரு சமூகத்திற்கு வளர்ச்சி இல்லை.

“குழந்தைகள் நம் கையில் சிறிய விதைகள், அவற்றை அன்பால் வளர்த்தால் உலகம் மலரும்.

### III வாய்ப்புகள் - நம்பிக்கையின் வெளிச்சம்

அச்சுறுத்தல்களுக்கு நடுவிலும் இன்றைய குழந்தைகளுக்கு பல வாய்ப்புகள் திறக்கப்பட்டுள்ளன.

1. அறிவை அடைய வசதிகள்
இணையம், அலைபேசி போன்றவை மூலம் உலகம் முழுவதும் உள்ள அறிவை சில நொடிகளில் அறிய முடிகிறது. அவர்கள் எந்த விஷயத்தையும் தேடி கற்றுக்கொள்ள முடிகிறது.

2. திறமை வெளிப்படுத்தும் மேடைகள்
இன்றைய உலகம் குழந்தைகளின் திறமைகளை அடையாளம் காணும் நிறைய வாய்ப்புகளை வழங்குகிறது. பாடல், நடனம், விளையாட்டு, விஞ்ஞானம் எல்லாவற்றிலும் தங்கள் திறமையை காட்ட முடிகிறது.

3. சமூக அக்கறை மற்றும் விழிப்புணர்வு
இன்றைய தலைமுறை குழந்தைகள் சமூக பிரச்சனைகள் குறித்து விழிப்போடு இருக்கின்றார்கள். பாலின சமத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விலங்குகள் மீதான அக்கறை போன்றவை அவர்களின் எண்ணங்களில் வெளிப்படுகின்றன.

“இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்”
- நெல்சன் மண்டேலா

### IV அச்சுறுத்தல்கள் - குழந்தைகள் பார்க்கும் பார்வையில்

நாம் சில குழந்தைகளுடன் நடத்திய கலந்துரையாடலில் அவர்கள் தங்கள் மனதைத் திறந்து பல விஷயங்களைப் பகிர்ந்தனர். அவர்கள் கூறிய கருத்துகள் நம் சமூகத்தின் உண்மையை வெளிப்படுத்துகின்றன.

1. ஆண் - பெண் வேறுபாடு
இன்னும் பல இடங்களில் குழந்தைகள் பாலின அடிப்படையில் வேறுபாடுகளை சந்திக்கின்றார்கள். “பெண்கள் இதை செய்யக் கூடாது”, “ஆண்கள் அழக்கூடாது” போன்ற எண்ணங்கள் அவர்களின் சுதந்திரத்தையும் மனவளர்ச்சியையும் குறைக்கின்றன.

2. நிறத்தை குறிக்கும் பாரபட்சம்
சில குழந்தைகள் கறுப்பு நிறம் என்று கேலி செய்யப்படுவது அவர்களுக்குத் துன்பமாக இருப்பதாக கூறினர். அழகின் அளவுகோல் நிறமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

“அழகு மனதில் தொடங்குகிறது, நிறத்தில் அல்ல”

3. ஆசிரியர்களின் அணுகுமுறை
பள்ளியில் ஒரு தவறு செய்தால் அதை மீண்டும் மீண்டும் சொல்லி அவமானப்படுத்தும் சிலர் குழந்தைகளின் மனதில் தன்னம்பிக்கையின்மையை உருவாக்குகின்றனர். குழந்தை ஒருவரின் தவறு அவரின் திறமையை அளவிடும் கருவியாகாது.

4. நம்பிக்கையின்மை
“யாரையும் நம்ப முடியாது” என்ற உணர்வை சில குழந்தைகள் வெளிப்படுத்துகின்றனர். குடும்பம், சமூகம் ஆகியவற்றில் பாதுகாப்பு உணர்வு குறைந்திருப்பது இதற்கு காரணம்.

5. தொழில் நுட்ப அச்சுறுத்தல்கள்
செயற்கை நுண்ணறிவு (AI) வளர்ச்சியால் எதிர்கால வேலை வாய்ப்புகள் குறைந்து விடுமோ என்ற அச்சம் சில குழந்தைகளிடையே உள்ளது. மேலும் மொபைல், இணையம், போதைப் பழக்கம் போன்றவை மன அழுத்தத்தையும் தனிமையையும் உருவாக்குகின்றன.

“தொழில்நுட்பம் ஒரு கருவி மட்டுமே, அதனை நமக்கு உதவும் வகையில் பயன்படுத்த கற்றுக்கொள்வதே முக்கியம்”.

தொகுத்தவர்: **செல்வி. டெல்பின்**

CTWWC

### ஜோக்ஸ்

AB க்கு போர் அடிச்சா என்ன செய்யும்?
CD போட்டு பாக்கும் . . .
EF க்கு உடம்பு சரியில்லைனா
GH க்கு போகணும்.



# பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பும் வரதட்சணைக் கொடுமையும் :




Adv. F. எமிலின் பிரீன்டா,
LL.B., M.L.,



பெண்கள் மற்றும் குழந்தைகள் குடும்ப வாழ்க்கை மட்டும் அல்லாமல் வேலைக்கு செல்லும் இடங்களிலும், பொது இடங்களிலும், அவர்களின் பாதுகாப்பிற்காகவும், மேம்பாட்டிற் காகவும், அரசு பல வித சட்டங்களை இயற்றியது.

மனித குலத்தின் ஆரம்ப காலக்கட்டத்தில் சமூகத்தை வழிநடத்தியது பெண்கள் தான். ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் சமூதாயத்தில் பலவிதமானக் கொடுமைகளை சகித்தும், சந்தித்தும் வருகிறார்கள்.

பெண்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அநேகம். அதில் குறிப்பாக, பெண்களை கேலிசெய்தல், பெண்களை மானபங்கம் செய்தல், வரதட்சணை கொடுமை,பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தல், 18 வயதுக்கு உட்பட்ட பெண்களை கடத்துதல், பெண்களின் விருப்பத்திற்கு மாறாக கருகலைப்பு செய்தல், பெண்களை காதலித்து, ஏமாற்றி பலாத்காரம் செய்வது, மனைவி உயிருடன் இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்தல், தனக்கு திருமணம் நடந்ததை மறைத்து 2-வது திருமணம் செய்தல், திருமணம் ஆன பெண்களை கொடுமைப் படுத்துதல், பெண்களிடம் வரதட்சணை கேட்டல், மணமக்களுக்கு சீர்வரிசை திரும்பக் கேட்டு கொடுக்க மறுத்தல், மணமக்களுக்கு கொடுத்த நகையை விற்று மோசடி செய்தல் போன்ற அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக வரதட்சணை தடுப்புச்சட்டம், 1961-ஆம் ஆண்டு வந்து 64 வருடம் கடந்து விட்ட நிலையிலும், குற்றங்கள் வெகுவாக குறையவில்லை என்பதுடன் வரதட்சணையின் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு இருப்பது தான் உண்மை.

கன்னியாகுமரி தமிழ் நாட்டின் 38 மாவட்டங்களில் கல்வியறிவு அதிகம் கொண்ட மாவட்டம் ஆகும். இது ஒருபுறம் இருக்க மறுபுறம் வரதட்சணை அதிகம் பெறும் மாவட்டம் மற்றும் வரதட்சணைக் கொடுமைகள், வரதட்சனை தற்கொலை கொலைகள் மற்றும் இதனால் குடும்ப விவாகரத்து நாளுக்கு நாள் குமரி மாவட்டத்தில் அதிகரித்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்ட பெண்களின் பெருமைகள் அவர்களின் கல்வி, பாரம்பரியம் மற்றும் சமூக பங்களிப்புகளில் உண்டு. கடனை வாங்கியாவது வரதட்சணை கொடுத்து திருமணம் எடுக்கும் பெற்றோர்கள் அநேகம்.

அறியாமை இருந்த காலக்கட்டத்தில் கூட குடும்ப விவாகரத்து மற்றும் வரதட்சணைக் கொடுமைகள் பெருமளவு காணப்படவில்லை. ஆனால், தற்போது குமரி மாவட்ட மக்கள் பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் சமூதாயத்தில் அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்துள் ளார்கள். அதைப் போன்று வீட்டிற்கு வீடு வரதட்சணைக் கொடுமைகள், தற்கொலைகள், கொலைகள் மற்றும் விவாகரத்து போன்றவை அதிகரித்துள்ளன.

வரதட்சணைக் கொடுமைகள் மற்றும் தற்கொலைகள், கொலைகள் இவற்றைத் தடுப்பதற்காக, பாதித்த பெண் மற்றும் அவரது குடும்பத்தினர் புகார் கொடுக்க சமூதாயத்தில்

முன்வரவில்லை. ஒரு பெண்ணுக்கு இழைக்கப் படும் வரதட்சணைக் கொடுமைகள், கொலை, தற்கொலைகள், விவாகரத்து போன்ற சம்பவங்களை புகார் கொடுப்பதற்கு பாதிக்கப்பட்ட பெண்களாக இருந்தாலும் சரி, பாதிக்கப்படாதவர்களாக இருந்தாலும் சரி, இவர்கள் கூறும் காரணங்களும் கருத்துகளும் என்னவெனில் குடும்ப மானம், கௌரவம் சமூதாயத்திலும் குடும்பத்திலும் மானம் போய்விடும் என்பதே. புகார் அளிக்கத் தயங்குதல், காவல் நிலையம் சென்று புகார் அளிப்பதை கேவலமாக எண்ணுதல், புகார் அளித்தாலும் மனுவை விசாரணை மேற்கொள்ளும் விதமும், வழக்கறிஞர்களை தேர்ந்தெடுப்பதில் குழப்பமும், மீடியாக்கள் CCTV, பத்திரிகை, Whatsapp, Instagram, Facebook போன்ற சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பி விடுவார்கள் என்ற பயமும் அவர்களை ஆட்கொள்கிறது. குடும்ப வன்முறை வழக்குகளில் 15% நபர்களே தண்டனை பெறுகின்றனர். கொலை மிரட்டலுக்கு பயந்தும், பெற்றோர் வீட்டிற்கு கொடுத்த அசையும் மற்றும் அசையா சீர்வரிசை சொத்துக்கள், பணம் மற்றும் நகைகள் பாதிக்கப்பட்ட பெண்மணிக்கு திரும்ப கிடைக்காத என்ற எண்ணத்திலும் பாதிக்கப்பட்ட பெண்ணை சமூதாயத்தில் பார்க்கும் பார்வை போன்ற காரணத்தால் கொலையில் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத பெண்கள் மற்றும் பெற்றோர் வரதட்சணைக் கொடுமைக்காக புகார் மற்றும் வழக்குகள் தொடர்வதற்கு தயக்கமும், முன்வருவதும் இல்லை. இந்த அறியாமையில் இருந்து பெண்கள் மற்றும் சமூதாயம் வெளியே வரவேண்டும். அரசால் இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு நலனுக்கான சட்டங்களின் பலனை முழுமையாக பெற்றுக் கொள்ள வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் புகார் கொடுப்பதற்கும் வழக்கு போடுவதற்கும் முன்வர வேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும்.




சமூக நலம் தான் தனி மனித வாழ்வின் அடித்தளம்.





# தனி மனித சமூக அக்கறை

ஒரு சமூகம் செழிக்க வேண்டுமானால் அங்கு வாழும் ஒவ்வொரு தனிமனிதரும் சமூக அக்கறையுடன் செயல்படுவது மிக அவசியம். தனிமனிதர் என்பவர் ஒரு சமூகத்தின் அடிப்படை அலகாவார். அவனது சிந்தனையும், செயல்களுமே ஒட்டுமொத்த சமூகத்தின் நிலையைத் தீர்மானிக்கின்றன. சமூக அக்கறை என்பது, தன்னைச் சுற்றியுள்ள உலகம் குறித்தும், அதில் ஆற்றவேண்டிய பங்கு குறித்தும் ஒருவன் உணர்ந்து செயல்படுவதை குறிக்கும்.

**சமூக அக்கறை என்றால் என்ன?**

சமூக அக்கறை என்பது வெறும் சட்டம் அல்லது விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது மட்டுமல்ல, அது தனது தனிப்பட்ட நலன்களைத் தாண்டி, சமூதாயத்தின் பொது நலனுக்காகவும், பிறரின் நன்மைக்காகவும், சுற்றுப்புறச்சூழலின் பாதுகாப்புக்காகவும் சிந்தித்து செயல்படும் ஒரு மனப்பான்மை. ஒரு மனிதன் பின்வரும் வழிகளில் சமூக அக்கறையை வெளிப்படுத்தலாம்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

நெகிழி பயன்பாட்டை குறைப்பது, குப்பைகளை முறையாக பிரித்து அப்புறப்படுத்துவது, மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பது, காற்று மாசுபடுவதை குறைப்பது, வீணாக தண்ணீரை வெளியேற்றாமல் தண்ணீரை சேமிப்பது போன்ற முயற்சிகளால் நாம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம்.

**சட்டங்களுக்கு மதிப்பளித்தல்**

போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது அரசின் விதிமுறைகளை கடைப்பிடிப்பது போன்ற செயல்பாடுகளால் சட்டங்களையும் நமது சமூகத்தையும் பாதுகாக்கலாம்.

**பிறருக்கு உதவுகள்**

ஏழைகள் மற்றும் உதவி தேவைப் படுபவருக்கு உதவுவது. தன்னார்வ பணிகளில் ஈடுபடுவது, முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு உதவுவது.

**சமூக நல்லிணக்கம்**

சாதி, மத பேதமின்றி அனைவரையும் சமமாக மதித்து, சண்டைகளை தவிர்த்து, தனி மனிதர் சமூக அக்கறையுடன் செயல் படுவதால் சமூதாயத்தில் பல நேர்மையான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**மேம்பட்ட சமுதாயம்**

ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படும் போது குற்றங்கள் குறை கின்றன. பொது இடங்கள் தூய்மையாகின்றன. மேலும் அமைதியான மற்றும் ஒருங்கமைக்கப் பட்ட சமூகம் உருவாகிறது. பேருந்து, பூங்காக்கள் போன்ற பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தாமல் பாதுகாக்கும் அக்கறை உருவாக்குகின்றது.

**பொருளாதார வளர்ச்சி**

ஊழலைத் தவிர்ப்பது, வரி செலுத்துவது போன்ற பொறுப்புமிக்க செயல்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவுகின்றன.

**மனிதாபிமான மேம்பாடு**

பிறரின் துயரங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை வளர்கிறது. வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களின் போது மக்கள் ஒருவருக்கொருவர் துணையாக நிற்கிறார்கள். இன்றைய சவால்கள் வேகமான உலக மயமாக்கல் மற்றும் சுயநலப்போக்கு காரணமாக, பல தனிமனிதர்கள் சமூக

அக்கறை இன்றி எனக்கு என்ன? என்ற மனநிலையுடன் வாழ்கிறார்கள். இது குப்பைகள் சேருதல், போக்குவரத்து நெரிசல், சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற பல சவால்களுக்கு வழி வகுக்கிறது. இந்த சவால்களை எதிர்கொள்ள தனிமனிதர்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

சமூக அக்கறை என்பது அரசாங்கத்தின் அல்லது பெரிய நிறுவனங்களின் கடமை மட்டுமல்ல. அது ஒவ்வொரு தனி மனிதரின் அடிப்படைக் கடமை. ஒரு சிறிய செயல் கூட பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். உதாரண மாக குப்பையை தொட்டியில் போடுவது, சாலையில் ஒருவரிடம் இனிமையாக பேசுவது, தண்ணீரை வீணாக்காமல் இருப்பது என நாம் எடுக்கும் ஒவ்வொரு பொறுப்பான நடவடிக்கையும் சமூக அக்கறை யின் வெளிப்பாடே ஆகும்.

நாம் ஒவ்வொருவரும் சமூக அக்கறையுடன் செயல்பட்டால் மட்டுமே நமது எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான மற்றும் செழிப்பான சமூதாயத்தை விட்டுச் செல்ல முடியும்.

**M.S. Amalin Manshika**
Alwarcoil

சமையல் குறிப்பு



## பாரம்பரிய முட்டை கிரேவி

**தேவையான பொருட்கள்**

முட்டை 2, சின்ன வெங்காயம் 10, வரமிளகாய் 2, மஞ்சள் பொடி கால் ஸ்பூன், குழம்பு மிளகாய் தூள் அரை ஸ்பூன், தேங்காய் தேவைக்கேற்ப, உப்பு, எண்ணெய், தண்ணீர், கறிவேப்பிலை.

**செய்முறை**

முட்டையை வேக வைத்து ஆறியதும் துண்டாக கட் பண்ணி வைக்கவும். சின்ன வெங்காயத்தின் தோல் நீக்கி கட் பண்ணி எடுக்கவும். தேங்காய் அரைத்துக் கொள்ளவும். தேவையான பொடிகளை எடுத்துவைக்கவும்.

பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, தேவைக்கு ஏற்றாற்போல் எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் அதில் சிறிய வெங்காயம், கறிவேப்பிலை, வரமிளகாய் சேர்த்து நன்கு வதக்கவும், வதங்கியதும் எடுத்து வைத்துள்ள பொடிகளை சேர்த்து வதக்கவும். பின் கட்பண்ணிய முட்டை, உப்பு சேர்த்து கிளறவும். அரைத்த தேங்காய் விழுது இரண்டு ஸ்புன், தேவைக்கு ஏற்ப தண்ணீர் சேர்க்கவும். தண்ணீர் வற்றி கிரேவி பதம் வந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி விடவும். இப்போது சுவையான பாரம்பரிய முட்டை கிரேவி ரெடி. இரண்டு நபர்களுக்கு போதுமானது. வாங்க சாப்பிடலாம்.

திருமதி. **சஜிதா**
அனிமேட்டர்

## சமூக அக்கறை

விடுமுறையில் கிராமத்தில் இருக்கும் பாட்டி வீட்டிற்கு வந்தாள் 7-ம் வகுப்பு மீரா. தினமும் விளையாட போகும் போது மரத்தடியில் வேப்பமரக் கொட்டைகளை சேகரித்து வந்தாள். மஞ்சள் பையில் அதை போட்டு கொண்டாள். எதற்கு இதை சேகரிக்கிறாய் என்று அம்மா கேட்ட போது அப்புறம் சொல்கிறேன் அம்மா என்றாள். இலை,குச்சிகளை வைத்து கிராப்ட் செய்வாள் போல இருக்கு என்றார் அப்பா. அதற்கு பதில் சொல்லாமல் புன்னகைத்தாள் மீரா. ஒரு வாரம் கழித்து சென்னைக்கு புறப்பட்ட போது அப்பா, சென்னைக்கு பக்கத்தில போனதும் நான் சொல்கிற இடத்தில் எல்லாம் கார் நிறுத்தனும். அங்கெல்லாம் பாதை ஓரமாய் இந்த வேப்பங்கொட்டைகளை போட போகிறேன். நூறு போட்டால் பத்தாவது முளைக்கும் அல்லவா? கிராப்ட் செய்தால் வீட்டிற்கு மட்டும் தான் அழகு. விதைச்சா ஊருக்கே அழகு. அப்பாவும் அம்மாவும் மீராவை அணைத்து கொண்டனர்.

**S.R. Sabrina,** Devicode

குழந்தையின் கண்களில் நம்பிக்கை இருக்கிறது. அதைக் காப்பது நம் கடமை.



# குழந்தைப் பருவ நிகழ்வுகள்

குழந்தைப் பருவம் ஒரு சந்தோஷமான காலம். உலகம் தெரியாத வரையில் வாழ்க்கை ரொம்ப இனிமையாக இருக்கும். உலகம் தெரிந்த பிறகுதான் கஷ்டமே ஆரம்பிக்கும். அப்படிப்பட்ட குழந்தைப் பருவத்தை எண்ணும் போது எண்ணங்கள் பல ஓடுகின்றன.

**குழந்தை பருவக்காலம்**



ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான குழந்தைப் பருவங்களைக் கொண்டு வாழ்கின்றனர். பழையக்காலங்களில் அவர்கள் வாழ்ந்த விதம் வேறு நாங்கள் வளர்கின்ற விதம் வேறு நான் அனுபவித்து கொண்டிருக்கின்ற குழந்தைப் பருவம், பாண்டி விளையாடுவது, ஓட்டம், சைக்கிள் மிதித்தல் என்றெல்லாம் விளையாடுவோம். என்னுடைய வீட்டைச் சுற்றி, அண்ணா, தங்கை, தம்பி என்று சொந்தங்கள் அதிகம். இப்பொழுது எங்களுக்கு பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, தாத்தா, அம்மம்மா, தாத்தா, பாட்டி என்று எங்களுடைய சொந்தங்கள் சிரிப்பும், சந்தோஷமான வாழ்க்கை.

**குழந்தைப் பருவ கூட்டாஞ்சோறு**



விடுமுறை நாட்களில் நாங்கள் ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் அரிசி, பருப்பு, காய்கறி எல்லோரும் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வந்து, அதை நாங்கள் சமைத்து சாப்பிடுவோம். கொரோனா காலத்தில் சிறியவர் முதல் பெரியவர் வரை நாங்கள் வைத்த கூட்டாஞ் சோறுதான் எங்களுக்கு மதிய உணவு, முடிந்து எல்லோரும் சேர்ந்து ஒரு விளையாட்டு. அந்த கூட்டாஞ்சோறின் ருசி வீட்டில் கூட கிடைக்காது.

**குழந்தைகளின் சண்டைகள்**



எங்கள் வீட்டை சுற்றி அக்கா, தங்கை, தம்பி எல்லோரும் உண்டு. சேர்ந்து விளையாடும் போது மாறி மாறி சண்டை, பின்பு சேர்ந்து விடுவோம். நாங்கள் ஒவ்வொருவரும் கூட்டம் கூட்டமாக தான் இருப்போம். எங்கள் வீட்டில் எங்க அக்காவை அம்மா திட்டினால் எங்களால் தாங்க முடியாது. உடனே எனக்கு கண்ணீர் வந்துவிடும். எங்க அக்கா வீட்டில் இருக்கும் போது நான் சண்டை போடுவேன். ஆனால் அக்கா வீட்டில் இல்லையென்றால் எனக்கு நேரம் போகாது. அதே எண்ணமாகத்தான் இருக்கும்.

**குழந்தைகளின் மனநிலை**

யார் பார்வைக்காகவும் கவலை கொள்ளாமல் எங்களுக்காக ஒரு சில மணித்துளிகள் செலவு செய்யுங்கள். குழந்தைகள் மனதில் நேசம் இருக்கும். பொய் இருக்காது. பொறாமை இருக்காது, பயம் இருக்காது, திருட்டு தெரியாது, சாதி, மதம் தெரியாது. அன்போடு அழைத்தால் பொய்யில்லா புன்னகை கிடைக்கும்.

குழந்தை முகம் மழலை மாறாது மனதில் கள்ளம், கபடம் இல்லா ஒரு பறவையைப் போல சிறகடித்த இந்த குழந்தைப் பருவத்திலேயே வளர்ந்த பின்னும் வாழ்வோம். மகிழ்வோம், பிறரையும் மகிழ வைப்போம்.

**ற. ஜெர்ஷிகா,**
ஆழ்வார்கோயில்

## இந்தியாவின் நிர்வாக பிரிவுகள்

| | | |
|---|---|---|
| 1. | மாநிலங்கள் | : 28 |
| 2. | யூனியன் பிரதேசங்கள் | : 08 |
| 3. | மக்களவை உறுப்பினர்கள் | : 543 |
| 4. | மாநிலங்களவை உறுப்பினர்கள் | : 245 |
| 5. | மாவட்டங்கள் | : 780 |
| 6. | மாநகராட்சிகள் | : 269 |
| 7. | நகராட்சிகள் | : 1874 |
| 8. | உயர் நீதிமன்றங்கள் | : 25 |

குழந்தைப் பருவம் - கனவுகள் வேரூன்றும் காலம்.

# குழந்தைப்பருவம்

குழந்தைப் பருவம் அன்பினால்
நிறைந்தது நினைவுகள்
தொட்டிலில் உறங்குவது
முதல் முறை கால் வைத்து
நடந்தது வானில்
சிறகடித்து பறந்தது போல்
இருந்தது
கொஞ்சி விளையாட நாள்கள்
அன்று நான் தூங்க அம்மா
வார்த்தைகள்தான் தாலாட்டு என்று
அப்பாவின் கை பிடித்து நடந்த
நாட்களெல்லாம் என்றும்
நிழலாக தொடர்கிறது
அழகிய அழுகையால்
மனம் கரைந்து விடுகிறது
பிஞ்சு விரல்களால் பல
தந்திரம் செய்த பருவம் அது
சுவரெங்கும் கிறுக்கி
விளையாடிய ஒரு கலைஞனின்
பருவம் அது

அம்மாவின் பாசம் கண்ட பருவம்
அது இரவைத் தொடரும் பகலானது
பொன் சிரிப்பால் மற்றவர்களை
மயக்கிய மாயங்கள் அது
குழந்தைப் பருவம் அனைவரின்
வாழ்க்கையை மேலும் அன்பு மகிழ்ச்சி
நிறைந்த நினைவுகளையே
விட்டு சென்றுள்ளது
மனதில் வஞ்சகமற்று
பொறாமை கொள்ளாது
பொய் கூறாமல்
வாழ்கின்ற இனிமையே உள்ளது
குழந்தை பருவத்தில் . . . !
அடைமழையில் நனைந்து
நில மண்ணை சாப்பிட
அன்னை குரல் கேட்டதும்
ஓடி ஒளித்தே சிரிக்கும் கனாக்காலம் . . . !
தோழியின் விளையாட்டு பொருள்
தனக்கு வேண்டுமென

நிலத்தில் உருண்டே அழும்
சுட்டித்தனம் நிறைந்த பருவம் . . . !
ஊர்வம்பில்லாது கவலைகளற்று தூக்கத்தல்
புரண்டே மகிழ்ச்சி
காணும் மென்மைப் பருவம் . . . !
சுதந்திரப் பறவைகளாய் தடைகளற்றே அன்னை
மடியில் தவழ்ந்தே அடம்பிடித்து பிறந்த
மேனியாய் உடையற்று ஓடித்திரிந்தே
விளையாடும் அழகியபருமே குழந்தை பருவம் . . . !
எத்தனை முறை
சண்டை போட்டாலும்
எத்தனை முறை
கோபம் கொண்டாலும்
மன்னிப்பை
மனதோடு ஏற்கும்
அந்த குழந்தை பருவம்
என்பது ஒரு
அற்புத வரமே !

**E.M. Ans Vaishali,**
Thenikulam


## மிட்ஸ் நிறைவாழ்வு சங்கம்

**மிட்ஸ் சுயஉதவிக் குழுக்கள்**

மிட்ஸ் பணிமண்டலத்தின் களியக்காவிளை, மார்த்தாண்டம், நாகர்கோவில் மண்டலங்களில் வழியாக 18 கிளஸ்டர் அமைப்புகள் வாயிலாக சேவை செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் கிளஸ்டர் அமைப்புகள் வழியாக பொருளர்களுக்கான கூட்டங்கள் நடைபெறும். இக்கூட்டத்தில் மிட்ஸிலிருந்து கொடுக்கின்ற அறிவிப்புகள் மற்றும் கணக்கு பயிற்சிகள் மற்றும் கணக்கு புத்தகங்கள் சரிபார்த்தல் ஆகியவை ஒவ்வொரு மாதமும் நடைபெறும்.

**சுற்றுலா நிகழ்வு**





மிட்ஸ் நிறைவாழ்வு சங்கத்தின் களியக்காவிளை மண்டலத்தின் கிராத்தூர் கிளஸ்டர் அமைப்பாளர் திருமதி. ஷீஜா அவர்கள் தலைமையில் 33 பொறுப்பாளர்கள் மற்றும் குழந்தைகள் ஒருநாள் இன்பச் சுற்றுலாவாக சென்றார்கள். அவர்கள் ரயில் பயணமாக 13-10-2025 அன்று கன்னியாகுமரி சுற்றுலாத் தலத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் பார்வையிட்டு ரயில் பயணமாக திருப்பி வீடுகளுக்கு சென்றார்கள்.

மேலும் 29-8-2025 அன்று பாலவிளை கிளஸ்டர் அமைப்பாளர் திருமதி. சசிகலா அவர்கள் தலைமையில் பாலவிளை கிளஸ்டர் பொறுப்பாளர்களும், கன்னியாகுமரி சுற்றுலா தலத்தை பார்வையிட்டும் மகிழ்ந்தார்கள். மொத்தம் 45 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

## மதுரை மண்டலம்



மிட்ஸ் பணிமண்டலத்திற்குட்பட்ட மதுரை மண்டலத்தில் வைத்து 20-11-2025 முதல் 22-11-2025 வரை மூன்று நாள்கள் சுயஉதவிக் குழுக்களின் கூடுகை நடைபெற்றன. 20-11-2025 அன்று மிட்ஸ் இயக்குநர் தலைமையில் களக்காடு பகுதியை மையமாக கொண்டு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மக்கள் சந்திக்கும் சவால்கள் பற்றியும், புதிய குழுக்கள் தொடங்குதல் பற்றியும் பயிற்சிகள் நடத்தப்பட்டது. இதில் மதுரை மண்டல இயக்குநர் அருட்தந்தை ஷாஜி, மதுரை ஒருங்கிணைப்பாளர் திரு.தேவராஜ், மிட்ஸ் பணியாளர்கள் திருமதி. ஷீஜா, திருமதி. ஷகிலா, திருமதி. சசிகலா மற்றும் மதுரை மண்டல பணியாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள்.

வேடர்புளியங்குளத்தில் 3 புதிய சுயஉதவிக்குழுக்கள் தொடங்கி வங்கி கணக்கு தொடங்குதல், கணக்கு பயிற்சி, குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு கொடுத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

தேவதானம்பட்டி, மறுகால்பட்டி மற்றும் கேங்குவார்பட்டி பகுதியில் 13 புதிய குழுக்கள் தொடங்கப்பட்டன. பொறுப்பாளர்களுக்கான பயிற்சி, கணக்கு புத்தகம் சரிபார்த்தல், ஊக்கப்பயிற்சி, கடன் வழங்க ஆவணங்கள் சரி பார்த்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. அனைத்து உறுப்பினர்களும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் ஒரு கதை. அதை அழகாக எழுதுவது பெற்றோரின் பொறுப்பு.

## பயணங்களின் பாதையில் வெற்றி அனுபவங்கள் . . .

**திருமதி, கலை அரசி**



நான் கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி ஊரை சார்ந்தவள். காதலித்து திருமணம் செய்து கொண்டேன். இரண்டு குழந்தைகள். சாதாரண குடும்ப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தோம். குடும்ப வாழ்க்கை சற்று வித்தியமாக சென்றது. கணவர் நண்பர்களுடன் சேர்ந்து குடி பழக்கத்திற்கு ஆளாகி, திடீரென்று பிரிந்தார். பிரிவைத் தாங்க முடியாமல் சோகத்தில் இருந்த நேரங்கள். மன அழுத்தத்தில் வீட்டின் ஒரு மூலையில் குடும்பத்தினரால் ஓரங்கட்டப்பட்டிருந்தேன். சற்று நிதானமாக சிந்தித்தேன். என்னால் சாதிக்க முடியும் என்று... தன்னம்பிக்கையோடு வீட்டின் பக்கத்தில் உள்ள ஓர் ஆலயத்திற்கு சென்று வந்தேன். வீடு மிகவும் மோசமான நிலையில் இருந்ததினால் ஆலயத்திலிருந்து வீட்டைக் கட்டிக்கொடுத்தார்கள். பின்பு மிட்ஸ் சுயஉதவிக்குழுவில் சேர்ந்தேன். சுயஉதவிக் குழுவிலிருந்து மிட்ஸ் குடும்ப வளர்ச்சித்திட்டத்தின் நிபந்தனைகளுக்கு ஒத்து இருந்ததால் பயனாளியாக்கப்பட்டேன். மிட்ஸ் நிறுவனம் வாயிலாக பல பயிற்சிகளில் பங்குகொண்டேன். முதலில் தொழில் செய்ய சிறிய நிதியுதவி கிடைக்கப்பெற்றதால் தையல் இயந்திரம் வாங்கினேன். அடுத்தகட்ட நிதியுதவியால் கோழி, ஆடு வாங்கி வளர்த்தேன். வருமானம் கிடைக்கப்பெற்றது. மனதில் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டது. அரசின் டெங்கு காய்ச்சல் சர்வே எடுக்கும் வேலைக்கு சேர்ந்தேன். "**என்னாலும் சாதிக்க முடியும்**" என்ற வீரவாக்கியத்தோடு துணிச்சலாக நின்று, குடும்பத்தை கட்டிக் காத்து, வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இத்தனை வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்த மிட்ஸ் நிறுவனத்திற்கு மிகுந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



**திருமதி, ஜெப ஷீலா**

நான் பூதப்பாண்டி என்னும் ஊரை சார்ந்தவர் திருமதி. ஜெப ஷீலா. கணவர் மற்றும் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தேன். கணவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இரண்டு ஆண்டுகள் வீட்டிலேயே முடங்கி கிடந்தேன். இந்த சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்று தத்தளித்து கொண்டிருந்த தருணத்தில், மிட்ஸ் முக்கடல் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன். அதிலிருந்து குடும்ப வளர்ச்சித் திட்டத்தில் பயனாளி ஆனேன். இத்திட்டத்திலிருந்து கிடைக்கும் உதவித்தொகைகளைக் கொண்டு பசு வளர்க்க துவங்கினேன். வெளி உலகமே தெரியாது இருந்தபோது மிட்ஸ் நிறுவனத்திற்கு வந்து பல பயிற்சிகளில் பங்கேற்றேன். எனக்கு தயக்கம் மாறியது. பின்னர், நான் ஒரு மருத்துவமனையில் நுழைவுச்சீட்டு எழுதுபவராக பணிக்கு சேர்ந்தேன். வேலையை திறம்பட செய்து வருகிறேன். குழுவிலிருந்து கடன்பெற்று இருசக்கர வாகனம் ஓட்ட பயிற்சி பெற்று ஓட்டுநர் உரிமம் பெற்றேன். சிறிய தொகையில் இருசக்கர வாகனம் வாங்கினேன். இப்போது வேலைக்கு இருசக்கர வாகனத்தில் செல்கின்றேன். வாழ்க்கைப் பாதையில் திருப்பங்கள் ஏற்பட்டபோது, கலங்கிய தருணங்களை எதிர்நீச்சல் போட்டு, வெற்றியோடு வாழ்க்கை வாழ, கற்றுத்தந்த மிட்ஸ் நிறுவனத்திற்கு மிக்க நன்றி

**திருமதி, செல்வராணி**



நான் பூதப்பாண்டி பஞ்சாயம், துவரங்காடு பகுதியில் உள்ள புளியன்குளம் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது மூன்றாம் வயதில் அப்பா இறந்துவிட்டார். என்னுடைய அம்மா, நான், மற்றும் தங்கையும் மலையில் சென்று விறகுவெட்டி கடையில் விற்று அதில் கிடைக்கும் வருமானம் வைத்து வாழ்ந்து வந்தோம். சவால்களின் மத்தியிலும் நான் நன்றாக படித்தேன். நான் B.Com. வரை படித்து முடித்துள்ளேன். எனக்கு எங்களுடைய தூரத்து உறவினரைப் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தேன். எங்களுக்கு இரண்டு பெண்குழந்தைகள் பிறந்தார்கள். சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கையின் மத்தியில் ஒரு நாள் எனது கணவர் வண்டியில் செல்லும் போது விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார். இதை அறிந்ததும் அந்த இடத்திலேயே நானும் எனது இரண்டு குழந்தைகளும் இறந்து விடலாம் என்று எண்ணினேன் ஆனால் இரண்டு பிள்ளைகளையும் கொன்று தற்கொலை செய்து கொள்ள மனமில்லாமல் வாழ்ந்து வந்தோம். அக்கம்பக்கத்தினர் மற்றும் குடும்பத்தார் தன் அம்மாவின் நிலைதான் உனக்கும் என்றும் பேசத்தொடங்கினார்கள். நான் மனமுடைந்த நிலையில் வீட்டை விட்டு வெளியே வராமல் ஓரமாக வாழ்ந்து வந்தேன். இந்நிலையில் மிட்ஸிலிருந்து குடும்பவளர்ச்சித் திட்டத்தில் எங்கள் குடும்பத்தை தேர்வு செய்தார்கள். இத்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உதவித்தொகையை கோழி வளர்த்தல் மற்றும் தேங்காய் வியாபாரம் செய்து முன்னேறி வருகின்றேன். பூதப்பாண்டி கிளஸ்டரில் மிட்ஸ் பனாயா குழுவில் மாதம் ரூபாய் 500 சேமிக்கின்றேன். பிள்ளைகளை படிக்க வைக்கின்றேன். எனது வீடு சீட் வீடால் ஆனது. தற்போது அரசு வீட்டு திட்டத்திலிருந்து ரூபாய் 320000 கிடைக்கப்பெற்று அழகான வீடு வைத்தோம். இப்போது மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறோம். நிலைமாறிய நேரங்களில் கைகொடுத்து உதவிய மிட்ஸ் நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.


தொகுத்தவர் : **திருமதி, சுகுமாரி,** அனிமேட்டர்

குழந்தையின் மனதை புரிந்து கொள்வதே உண்மையான கல்வியின் தொடக்கம்.

# விருட்சம்

விருட்சம் நுண்கடன் திட்டம் வாயிலாக மிட்ஸ் சுயஉதவிக் குழுக்களுக்கு பொருளாதார முன்னேற்றத்தை முன்னிலைப் படுத்தி மிட்ஸ் நிறுவனத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒரு மண்டலம் வழியாக கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. மண்டலங்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி பின்வருமாறு.

| வ.எண் | மண்டலம் | வழங்கப்பட்ட குழுக்கள் | வழங்கப்பட்ட மொத்த உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1 | களியக்காவிளை | 9 | 35 |
| 2 | நாகர்கோவில் | 7 | 28 |
| 3 | மார்த்தாண்டம் | 29 | 116 |






# மிட்ஸ் தளிர்கள் உலகம்

**மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு (MTT)**

- 28.09.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு (MTT) வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 98 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.
- 26.10.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 124 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.

**மாதாந்திர சிறப்பு வகுப்பு**

- 29.09.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு அருட்சகோதரி சாவியோ அவர்களால் போதை விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகளில் 63 மாணவர்களும் 38 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.
- 11.10.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு திரு.மைக்கிள் அவர்களால் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி அளிக்கப் பட்டது. இந்த நிகழ்வுகளில் 64 மாணவர்களும் 43 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

## ஆஸ்தி அமைப்பு

- 01.10.2025 அன்று காலை 10.30 மணிக்கு தளிர்கள் உலகம் திட்டத்தின் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து நடத்தும் ஆஸ்தி அமைப்பின் கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இந்த கூடுகையில் மொத்தம் 49 மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## குழந்தைகள் தினவிழா

மிட்ஸ் தளிர்கள் உலகம் பயனாளிகளின் குழந்தைகள் தினமானது 15-11-2025 அன்று மிட்ஸ் அரங்கத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. அன்றைய தின கருப்பொருளாக "**எனது நாள், எனது உரிமைகள்**" என்ற தலைப்பை மையப்படுத்தப்பட்டது. குழந்தைகள் மற்றும் தாய்மார்களின்

பல்வேறு திறமைகளை வெளிக்கொணரும் விதமாக எழுத்து மற்றும் ஓவியத் திறன்வளர் போட்டிகள் நடைபெற்றன. மிட்ஸ் தலைவர் மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அடிகளார் தலைமையில் குழந்தைகள் தின பொதுக்கூட்ட நிகழ்வானது நடைபெற்றது. தலைவர் உரையில் தளிர்கள் திட்ட பயனாளிகள் நல்லத் திறமைகளைக் கற்று, மாண்புடைய மாணவர்களாக திகழவேண்டும் என்று கூறினார். மிட்ஸ் இயக்குநர் முனைவர் ஜெறோம் அடிகளார் **“எனது நாள். எனது உரிமைகள்”** என்ற தலைப்பில் துவக்கவுரையாற்றினார். செல்வி. ஆன்சிலின்செனி குழந்தைகள் தினவிழா குறித்து சிறப்புசெய்தியை பகிர்ந்தார்கள். ஆசிரியர் திருமதி. ஜெய்சி அவர்கள் குழந்தைகளுக்கு சிறப்பு சிந்தனை கருத்துக்களை கதைகள் வாயிலாக எடுத்துக்கூறினார். மேலும் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 90% மதிப்பெண்களோடு வெற்றி பெற்ற 3 குழந்தைகளுக்கு ஊக்கப்பரிசும் வழங்கப்பட்டது. மட்டுமல்லாமல் கிறிஸ்மஸ் நாட்களை எப்படி பயனுள்ள பொழுதாக கழிக்க வேண்டும் என்பதை குறித்தான ஒரு அட்டவணை தயார் செய்து அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டது. நிகழ்வுகளை மெருகூட்டும் விதமாக குழந்தைகளின் கலைத்திறன் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. அனைவருக்கும் நல்ல சுவையான உணவு மிட்ஸ் குடும்ப உறுப்பினர்களால் பரிமாறப்பட்டது.





## கோல்பிங் தின விழா

கோல்பிங் இந்தியா சார்பாக அடோல்ப் கோல்பிங் அவர்களுக்கு அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டதனை சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 27-ம் நாள் கோல்பிங் தினமாக கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டிற்கான கோல்பிங் தின கொண்டாட்டமானது 18.10.2025 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்கள் கோல்பிங் தின வாழ்த்துரை வழங்கினார்கள். திருமதி ஏஞ்சல் அவர்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டின் தீமைகள் குறித்து கருத்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையுரையாற்றி கோல்பிங் குடும்பங்கள் சமூகத்துக்கும், திருச்சபைக்கும் எடுத்துக்காட்டான குடும்பங் களாக திகழ வேண்டும் என்று பல்வேறு நிகழ்வுகளை எடுத்துக் கூறி வாழ்த்தினார்கள். விழாவில், சிறப்பாக செயல்பட்ட கோல்பிங்



குடும்பங்களுக்கு ஆயர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, செயற்குழு உறுப்பினர் திரு. பால்ராஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற பொதுக்கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. பின்னர் பிளாஸ்டிக் மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மிட்ஸ் நிறுவனத்தில் துவங்கி குழித்துறை HOM நிறுவனம் வரை நடைபெற்ற இந்த பேரணியில் அனைத்து கோல்பிங் குடும்ப உறுப்பினர்களும், மிட்ஸ் பணியாளர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். தொடர்ந்து மதிய உணவுடன் விழா நிறைவுபெற்றது. இவ்விழாவில் மொத்தம் 700-க்கும் மேற்பட்ட கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

குழந்தையின் கைகள் சிறிதாக இருக்கலாம். ஆனால் அதில் பெரிய அன்பு நிறைந்துள்ளது.

# மிட்ஸ் மரியன் இயக்கம்

மிட்ஸ் மரியன் இயக்கத்தின் சார்பாக மிட்ஸ் பணிமண்டலத்திற்குட்பட்ட கைம்பெண்களின் மேம்பாட்டிற்கான கருத்தமர்வு கூடுகையானது 12-11-2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தின் பயிற்சியாளராக நாகப்பட்டினம் கலங்கரை நிறுவனத்தின் இயக்குநர் இயேசுசபை அருட்பணியாளர் Fr. குழந்தைசாமி அவர்கள் வழிநடத்தினார்கள். கைம்பெண்களின் நல்வாழ்விற்காக அவர்களின் தரவுகளை சேகரித்ததின் அடிப்படையில் 1045 பேர் பதிவாகியுள்ளனர். இவர்களுடைய தேவைகள் மற்றும் உரிமைகள் குறித்தான  தரவுகளின் அடிப்படையில் இந்த அமர்வு நடைபெற்றது. இதில் மிட்ஸ் இயக்குநர் கைம்பெண்களின் தற்போதைய நிலை என்ன? என்பதை காணொலி வாயிலாக சுட்டிக் காட்டினார். மிட்ஸ் மரியன் இயக்கத்தின் செயல்பாட்டு நுணுக்கங்களை மிட்ஸ் திட்ட அலுவலர் காணொலி மூலம் காண்பித்தார்கள். பின்னர் நான்கு குழுக்களாக பிரித்து பெறப்பட்ட தரவுகள் தொடர்பாக நான்கு தரவுகளை மையப்படுத்தி அடுத்தகட்ட நகர்விற்கான கலந்தாய்வு நடைபெற்றது. இதில் ஒத்த கருத்துக்களை தொகுத்து கைம்பெண்கள் சமூகத்தில் மதிக்கத்தக்க மக்களாக மாற்ற வேண்டிய ஆயத்த செயல்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. மிட்ஸ் பணியாளர்கள் உட்பட 30 நபர்கள் கலந்து கொண்டார்கள். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மரியன் இயக்க ஒருங்கிணைப்பாளர் Sr. அகதா அவர்கள் செய்தார்கள்.





# மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டம்

சமூக பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் கூடுகை கூட்டமானது 24-10-2025 அன்று **"ஒன்றாக நாங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்"** என்ற மைய சிந்தனையோடு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அடிகளார் சமூக பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து தலைமையுரையாற்றினார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு ஷாஜன் ஜோசப் அவர்கள் காப்பீட்டின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்து விழாவினை சிறப்பித்தார்கள்.சிறப்பு கருத்துரையாளராக வருகை தந்த நாஞ்சில் நாதம் கலைத்தொடர்பு மையம் கோட்டார் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஞானதாஸ் அடிகளார் அவர்கள் **"டிஜிட்டல் பாதுகாப்பு"** என்பதைப்பற்றி சிறப்பு கருத்துக்கள் பகிர்ந்தார். இன்றைய காலகட்டத்தில் தனிப்பட்ட முறையிலும், வங்கி சார்ந்த வகையிலும், விளையாட்டு ரீதியாகவும், விளம்பர வியாபார முறையிலும் மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டிருப்பதையும், அதிலிருந்து விடுபட எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும் என்பது குறித்தும், பல்வேறு நிகழ்வுகளை காணொளி காட்சி வாயிலாக எடுத்துக்காட்டி விளக்கினார்கள் தொடர்ந்து, மிட்ஸ் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து இறந்த கோல்பிங் குடும்பத்தை சார்ந்த இரண்டு நபர்களின் வாரிசுகளுக்கு தலா ரூ.12,500/- வைத்து ரூ. 25,000/- க்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும் இந்த திட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, உழைத்து வரும் மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் முகவர்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட மஹற்கோடா தேவா செடியானது வழங்கப்பட்டது. மொத்தம் 42 நபர்கள் கலந்துகொண்டனர்.



குழந்தைப் பருவம் நம் வாழ்வின் ஒளி, அதை நம் இதயங்களுக்குள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

## பிற நிகழ்வுகள்

### இலவச கண் பரிசோதனை முகாம்

25.09.2025 அன்று மிட்ஸ் மற்றும் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் சூரியகோடு பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 55 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் இயக்குநர்களின் கூடுகை

28.09.2025 மற்றும் 29.09.2025 ஆகிய இரண்டு தினங்கள் கொல்லி மலையில் வைத்து நடைபெற்ற DSSS Directors' Gathering and CSR Funding Session கூட்டத்தில் மிட்ஸ் இயக்குர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

### சூழியல் பாதுகாப்பு முகாம்



குழித்துறை நகராட்சியும், மிட்ஸ் நிறுவனம் மற்றும் அன்னம்மாள் மருத்துவக் கல்லூரி குழித்துறை இணைந்து நடத்திய சூழியல் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியானது 11-10-2025 அன்று நடைபெற்றது. நகராட்சி மேயர் மற்றும் சுகாதாரப்பணியாளர்கள், அன்னம்மாள் மருத்துவ கல்லூரி முதல்வர் மற்றும் மாணவர்களும், மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூகப்பணி நிறுவனத்தின் பொறுப்பாளர்கள், கழுவன்திட்டை சுற்றுவட்டாரத்தை சார்ந்த மிட்ஸ் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு பொது சுகாதாரப்பணியில் ஈடுபட்டனர்.

### மிட்ஸ் ஜீவன் திட்டம்

29.10.2025 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5,000/- வீதம் ரூபாய் 1,05,000/- வழங்கப்பட்டது.

### மிட்ஸ் எழுவோம் இயக்கம்



மிட்ஸ் எழுவோம் இயக்கத்தின் சார்பாக புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் புற்றுநோய் பரிசோதனை முகாம் நடைக்காவு கிளஸ்டர் சார்பாக நடைக்காவு ஆலயத்தில் வைத்து மிட்ஸ் திட்ட அலுலவர் திரு.ஷாஜன் ஜோசப் தலைமையில் 27-11-2025 அன்று நடைபெற்றது. நாகர்கோவில் கிங்ஸ் மருத்துவமனையும் மிட்ஸ் நிறுவனமுமாய் இணைந்து நடத்திய முகாமில் 2 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தி வழங்கினார்கள். மொத்தம் 72 நபர்கள் முகாமில் கலந்து பரிசோதனை செய்துகொண்டார்கள்.

### வருவாய் ஈட்டும் திட்டம்

சுயஉதவிக்குழு மற்றும் கோல்பிங் குடும்பங்களை சார்ந்த 27 இளம் கைம்பெண்களின் விண்ணப்பங்களை பெற்று, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக 1-11-2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு கூடுகையானது துவங்கப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் தலைமையுரையாற்றினார். மிட்ஸ் திட்ட அலுவலர் திட்டத்தை குறித்தான தெளிவான அறிவுரைகள் வழங்கினார். பயிற்சியாளராக கால்நடை மருத்துவர் Dr. Raymond Singh, Senior Vet. Live Stock Supervisor, Marthandam அவர்கள் தங்களின் ஆடு வளர்ப்பு பயிற்சி அனுபவங்களை பகிர்ந்தார்கள். மிட்ஸ் தளிர்கள் உலகத் திட்டத்தை சார்ந்த திருமதி. சுபா - பாத்திமாநகர் அவர்கள் தன்னுடைய ஆடுவளர்த்தல் அனுபவத்தை எளிமையான முறையில் பகிர்ந்து கொண்டார்கள். பயிற்சி பெற்ற 27 கைம்பெண்களுக்கும் ரூ.10000 வீதம் காசோலையானது மிட்ஸ் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது. இத்தொகையானது ஃபோடர்ரியரிங் தொண்டு நிறுவனத்தின் உதவியால் ரூ.270000 இளம் கைம்பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்த வழங்கப்பட்டது. 27 நபர்களும் தாங்கள் வாங்கிய காசோலைகளுடன் இத்தொழிலை சிறந்த முறையில் செய்வோம் என சொல்லிக்கொடுத்த உறுதிமொழியை ஏற்றுச்சொன்னார்கள்.



உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய மிகப்பெரிய பரிசுகள் பொறுப்பின் வேர்களும் சிகரத்தின் சிறகுகளுமே
- டெனிஸ் வெய்ட்லி.

## மிட்ஸ் அடுத்தகட்ட வளர்ச்சிப்பணிக்கான கலந்தாய்வு கூடுகை . . .



அகில உலக கத்தோலிக்க திருஅவையின் தலைவராகிய திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களின் திருத்தூது மடலின் "Dilexi te" என்ற லத்தீன் மொழியில் "ஏழைகளை அன்பு செய்கின்றேன்" என்ற கருத்தினை வாழ்வாக்கிட மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் மறைமாவட்ட அருட்தந்தையர்களும் மிட்ஸ் சமூகப்பணி நிறுவனமும் ஒன்றிணைந்து ஒரே சேவையை ஆலயங்களில் வாழும் அடிமட்ட மக்களின் நிலையான வளர்ச்சிக்கு தேவையான முன்னோக்கு சிந்தனையை கருத்தில் கொண்டு 25-11-2025 அன்று மிட்ஸ் நிறுவனத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு கருத்தரங்கு கூடுகையானது ஆரம்பமானது. மிட்ஸ் இயக்குநர் முனைவர் அருட்தந்தை ஜெறோம் அடிகளார் அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்று அமர்வின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக்கூறி, அனைத்து நிகழ்வுகளையும் முன்னின்று நடத்தினார்கள். கோட்டாறு மறைமாவட்டத்தை சார்ந்த அருட்தந்தை எட்வின் மற்றும் திருச்சி சலேசியன் சபையை சார்ந்த அருட்தந்தை பரத் ஜெயராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக வந்து நிகழ்வுகளை மெருகேற்றச் செய்தார்கள். நிலையான வளர்ச்சிக்கான கோரிக்கைகளில் உள்ள 16 அம்ச திட்டங்களை மிட்ஸ் நிறுவனம், அருட்தந்தையர்கள், பங்கு தளங்கள் வழியாகவும் ஏழை எளிய மக்களில் எவ்வாறு சென்றடைய வேண்டும் எனவும், ஏழைகளை எவ்வாறு அன்பு செய்ய வேண்டும் எனவும் எடுத்துக்கூறினார். மிட்ஸ் நிறுவனத்தில் செயல்படுகின்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் மிட்ஸ் நிறுவனம் கடந்து வந்த பாதைகள் குறித்தான காணொளியை திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக்கூறினார். மேலும் ஒவ்வொரு ஒருங்கிணைப்பாளரும் தங்களது துறை சார்ந்த பணிகளை குறித்தான விளக்கங்களை காணொளியை வடிவில் காண்பித்தார்கள். மேலும், மறைமாவட்ட அருட்தந்தையர்களும் மிட்ஸ் பணியாளர்களுமாக இணைந்து ஆறு குழுக்களாக ஆறு கேள்வி களுக்கு பங்கு தளங்களில் பங்கு தந்தையர்களும் மிட்ஸ் குடும்பமும் ஒன்றோடொன்று உண்மையான உறவுடன் செயல்படவும் அடித்தட்டு மக்களின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குழுக்களின் பிரதிநிதிகள் சார்பாக பகிரப்பட்டது. நாம் அனைவரும் நீதிக்காக ஒன்றிணைவோம், சமூக மாற்றத்தை பங்களவில் முன்னெடுப்போம் என்ற சிந்தனையை கருத்தில் கொண்டு முன்னேறுவோம்.



## கைம்பெண்களின் பாதுகாப்பிற்கு . . .

- வாழ்வாதாரம், சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம் என எல்லா வாழ்க்கைச் சூழலிலும் கைம்பெண்களுக்குச் சம உரிமை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
- கணவர் மறைவுக்குப் பின் கைம்பெண்களின் மீது திணிக்கப்படுகிற எல்லா சமூக, பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை அழிக்க வேண்டும்.
- கைம்பெண்கள் நிலைக்கு முன், அவர்கள் மகிழ்ச்சியுடன் பின்பற்றிய எல்லா சமூகப் பழக்கங்களை தொடர்ந்திட வழிவகை செய்ய வேண்டும். எல்லா அநீதிகளிலிருந்தும் உதாரணமாக, மூடத்தனமான பண்பாடு மற்றும் சமயப் போதனைகள், செயல்பாடுகள் இவைகளிலிருந்து கைம்பெண்களைப் பாதுகாக்க வேண்டும்.
- கைம்பெண்களின் உரிமைகளான சுயமரியாதை, உடல் மற்றும் கற்பு பாதுகாப்பு மற்றும் நேர்மை, உயிர்பாதுகாப்பு, வாழ்வாதாரம் மற்றும் உடமைகள் ஆகிய அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்.
- கைம்பெண்களின் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.
- சட்டங்களுக்கு எதிரான குற்றங்களையும் நடைமுறைகளையும் சான்றாகக் காட்டி கைம்பெண்களுக்கான எல்லா உரிமைகளையும் பட்டியலிட வேண்டும்.
- கைம்பெண்கள் தங்களின் முன்னேற்றத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அரசு அலுவலர்களையும், காவல்துறையினரையும் அணுகும் போது அவர்களுடைய கடமைகளையும், பொறுப்புகளையும் பட்டியலிட வேண்டும்.
- இதன் மூலம் கைம்பெண்கள் மாண்புமிக்கப் பெண்களாக முழுமையான குடியுரிமை கொண்ட இந்தியப் பெண்களாக வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

நம்மால் முடியுமெனில் ஒரு உயிரை மகிழ்விப்பதே மனிதநேயம்.

# திருமதி. ஷைனியின் கனவு இல்லம் தேடி ...

இயற்கையின் கொடையாம் கன்னியாகுமரி மாவட்டம். கடல் எழில் கொண்ட மஞ்சத்தோப்பு புதுவல் கிராமம். இக்கிராமத்தில் திருமதி. ஷைனி, அவருடைய கணவர் மற்றும் மூன்று குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தனர்.

**குடும்பத்தின் உறுப்பினர் விபரம்**

| வ.எண் | பெயர் | உறவுமுறை | வயது | தொழில்/ படிப்பு |
|---|---|---|---|---|
| 1 | ஷைனி B | பயனாளி | 34 | தொழில் செய்ய முடியவில்லை |
| 2 | பிரசாந்த் C | கணவர் | 40 | தையல்காரர் - மாற்றுத்திறனாளி |
| 3 | பிரிஷா | மகள் | 11 | VI |
| 4 | பிரிசில்லா | மகள் | 9 | III |
| 5 | பிரீதிகா | மகள் | 7 | II |

கணவர் தையல் தொழில் செய்பவர். தொழிலை நல்ல முறையில் செய்ய வீட்டில் நல்ல வசதி இல்லை. வேறு தொழில் செய்ய காலின் மாற்றுத்திறனால் முடியவில்லை. மூன்று பெண் குழந்தைகள் உள்ளதால் ஷைனிக்கு வேலைக்கு செல்ல முடியவில்லை. குழந்தைகளை கவனிக்க யாரும் இல்லை. மேலும், ஷைனி இரத்த சோகை மற்றும் ஆஸ்துமா நோயால் அவதிப்படுபவர். அதனால் வேறு வேலைக்கு போக முடியவில்லை. பழைய குடும்ப வீடு ஓட்டு வீடு. அவ்வீட்டில் ஓர் அறையில் வாழ்ந்து வந்தனர். சொந்தமாக 8 சென்ட் நிலம் உள்ளது. இவர்களுக்கு தனியாக வீடு வைக்க இயலாத சூழல். சொந்த நிலத்தில் வீடு கட்டலாம் என முடிவு செய்தார்கள். ஆனால் வீடு கட்டும் அளவிற்கு வருமானம் இல்லாத சூழ்நிலை. வீடு இல்லாததால் குழந்தைகளை கொண்டு அங்குமிங்குமாக அலைந்து திரிந்தார்கள். மழை பெய்தால் வீட்டில் அனைவரும் தங்கமுடியாத நிலைமை. சொந்தமாக ஓர் இல்லம் அமைக்க நீண்ட நாள் கனவு . . . வீடு இல்லா தன்மையை போக்க வேண்டும் என்பது ஆழ்மனதின் நிலை.

“**தடைகள் பல வந்தாலும் . . தாவி சென்று ஓடு . . . சோதனை காலத்தை தூக்கி போட்டு விட்டு . . . சாதனை காலத்தை நோக்கி அடி எடுத்து வை . . .**” என்பதை மனதில் பதித்து வாழ்ந்து வந்தார்கள். அதன்படி அவர்கள் தூய திருக்குடும்ப கோல்பிங் மஞ்சத்தோப்பு குடும்பத்தில் உறுப்பினர் ஆனார். திருமதி. ஷைனி குடும்பம் மிட்ஸ் குடும்ப வளர்ச்சித் திட்டத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உள்ளதால், விண்ணப்பம் பெறப்பட்டு மிட்ஸ் குழுமம் பார்வையிட்டு, அறிக்கையானது குடும்ப வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. விண்ணப்பப் படிவத்தை ஆய்வு செய்து, குடும்ப வளர்ச்சித் திட்ட அலுவலகத்திலிருந்து ஒப்புதல் அளிக்கப்பட்டது. திருமதி. ஷைனி அவர்கள் குடும்பத்தை பயனாளியாக தேர்வு செய்யப்பட்டது. குடும்ப வளர்ச்சித் திட்டத்திலிருந்து சிறு சிறு உதவிகள் கிடைத்தது. கோழி, ஆடு வளர்த்து சிறிய வருமானம் கிடைக்கப்பெற்றது. குடும்பத்தையும் கவனிக்க முடிகிறது. குழந்தைகளின் படிப்புச் செலவிற்கு சிறிய வருமானம் கிடைத்தது.

மிட்ஸ் நிறுவனம் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவு வெள்ளி விழாவின் போது மிட்ஸ் பணி மண்டலத்திற்குட்பட்ட வீடு இல்லா குடும்பங்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு வீடு வைத்து கொடுக்கும் விதமாக ஜூபிலி வீட்டுத்திட்டம் அறிவிக்கப்பட்டது. திருமதி. ஷைனி அவர்களும் தேர்வுச் செய்யப்பட்டு, மிட்ஸ் ஜூபிலி வீட்டுத்திட்டத்திற்கான முதல் கட்ட பணி துவங்க ரூ. 300000 காசோலையானது MIDS Roof என்ற பெயரில் மிட்ஸ் வெள்ளி விழா நிறைவின் போது மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களால் வழங்கப்பட்டது.




ஜூபிலியில் கிடைக்கப்பெற்ற உதவித் தொகையும், சிறு சிறு உதவித்தொகைகளும் சேர்த்து புதிய வீடு கட்டி முடிக்கப்பட்டது. மிட்ஸிலிருந்து மொத்த தொகையாக ரூ. 300000 வழங்கப்பட்டது. மீதமுள்ள 5,00,000 ரூபாய் திரு. பிரசாந்த் அவர்களின் அண்ணன் மற்றும் உறவினர்களின் துணையோடு கட்டி முடிக்கப்பட்டது. வீட்டின் புதுமனைப்புகு விழாவானது 3-3-2025 அன்று நடைபெற்றது. சொந்தமாக வீடு இல்லாது இருந்த திருமதி. ஷைனி அவர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியது.

**“விதி ஆயிரம் கதவுகளை மூடினாலும்,**
**முயற்சி ஒரு ஜன்னலையாவது திறக்கும்!**
**முடங்கி விடாதே தொடர்ந்து முயற்சி செய்”**
என்னும் வாக்கியத்தை மனதில் இருத்தி இல்லத்தை கட்டி முடித்தார்கள்.



சொந்தமாக வீடு உள்ளதால் கணவருக்கு தையல் தொழில் செய்ய வசதியாக உள்ளது. நல்ல மகிழ்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் தொழிலைச்செய்கிறார்கள். பிள்ளைகளின் படிப்புச்செலவிற்கு தையல் தொழிலால் இலாபம் கிடைக்கிறது. இதனால் சவால்களின் மத்தியிலும் சுமூகமாக... வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்கின்றனர்.

**“சாதிக்கும் எண்ணம் ஆழ்மனதில் தோன்றி விட்டால் எது இருந்தாலும் இல்லை என்றாலும் சாதிக்கமுடியும்.”** என்பதை திருமதி. ஷைனி அவர்கள் கனவிலிருந்து நிஜ வாழ்வாக்கி சாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொகுத்தவர் : திருமதி. **வினிதா**
ஒருங்கிணைப்பாளர்

## ச ட் னி



அப்பப்பா! எத்தனை வித சட்னி!
என்னென்ன சட்னி!
ஐய்யய்யோ! என்ன சுவையே சுவை!
சட்னி விதங்களோ!
நாமும் சமைக்கலாமே! சுவைக்கலாமே!
சட்னி விதங்கள்!

தேங்காய் சட்டி (வெள்ளை,சிகப்பு),
தக்காளி சட்னி, வெங்காய சட்னி, கார சட்னி,
கொத்தமல்லி சட்னி,
கறிவேப்பிலை சட்னி, வேர்க்கடலை சட்னி, என
தொடரும் . . . ! ! !

சிந்திப்போம்! செயல்படுத்துவோம்!
பாரம்பரியம் காப்போம்! உடல்நலம் காப்போம்!

**திருமதி, சஜிதா**
அனிமேட்டர்

தனிமனிதன் சமூகத்திற்காக வாழும் போது தான் சமூகமும் அவனுக்காக வாழும்.

குலுக்கல் முறையில் பரிசு பெறுவீர்

# ஐக்கியச்சுடர் இதழ் வாசித்து விடை எழுதும் போட்டி

1. 2025 முக்கிய தினங்களில் மார்ச் 22 என்ன தினம் அனுசரிக்கப்படுகிறது?
2. கொடுப்பதில் இன்பம் காணும் விழா . . . . . . . . . . . . . .
3. உழைக்க நேரம் ஒதுக்குங்கள். அது . . . . . . . . . . . . . .
4. நமது . . . . . . . . . . . . . மற்றும் . . . . . . . . . . . நம்மை உயர் மனிதர்களாகச் செதுக்கட்டும்.
5. சூழியல் மாசுக்கட்டுப்பாட்டை தடுக்கும் விதமாக பூதப்பாண்டி கிளஸ்டரில் துவங்கப்பட்ட திட்டம் எது?
6. மிட்ஸ் குழுக்களுக்கு பெடரல் வங்கி சார்பாக 17-12-2024 அன்று வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை எவ்வளவு?
7. கோடைக்கால விடுமுறை பயிற்சியின் கருப்பொருள் என்ன?
8. மிக சிறந்த தூய்மை என்பது . . . . . . . . . . . . .
9. ரூபாய் 3,25,000 மொத்தம் 13 நபர்களுக்கு 25000 வைத்து வழங்கப்பட்ட திட்டம் எது?
10. உலக கைம்பெண்கள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட சிறப்பு மாநாட்டின் கருப்பொருள் என்ன?
11. குடும்ப வாழ்வு பெறல் திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கும் நிகழ்வானது 18-3-2025 அன்று நடைபெற்றது. அன்றைய நாள் தொழில் செய்வதற்காக எத்தனை நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது?
12. உணவில் . . . . . . . சேர்த்துக்கொள்.
13. மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டத்திலிருந்து 01-01-2018 முதல் 15-04-2025 வரை எத்தனை நபர்களுக்கு இறப்புத்தொகை வழங்கப்பட்டது?
14. 02-02-2025 அன்று புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் எத்தனை இடங்களில் நடத்தப்பட்டது?
15. நேர மேலாண்மையில் 60 விழுக்காடு நேரம் . . . . . . . . . தாகும்.
16. நோயின்றி வாழ . . . . . . . மருந்தே!
17. குடும்ப வளர்ச்சி திட்ட(MR & MA) பயனாளிகளுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது நடைபெற்றது அதில் கலந்து கொண்ட மொத்த பயனாளிகள் எத்தனை?
18. விண்ணைத்தொடு திட்டத்தில் 18-08-2025 அன்று . . . . . . . . . . . . கூட்டம் நடத்தப்பட்டது?
19. விருட்சம் நுண்கடன் திட்டம் வாயிலாக ஜனவரி - மார்ச் 2025 மாத ஐக்கிய சுடர் இதழில் களியக்காவிளை பணிமண்டலத்திற்கு டிசம்பர் 2024 வழங்கப்பட்ட கடன்தொகை எவ்வளவு?
20. தளிர்கள் உலகம் திட்டம் வழியாக பயன்பெற்று, உயர்கல்வி பயின்று வருகின்ற முன்னாள் பயனாளிகளுக்காக துவங்கப்பட்ட திட்டம் எது?
21. 8-3-2025 அன்று நடைபெற்ற விழாவின் கருப்பொருள்?
22. 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் முதன் முதலாக தங்கப்பதக்கம் வென்றவர்?
23. எப்போதும் செலவு போக மீதியை சேமிக்காதே, . . . . . . . . . .
24. தொலைநோக்கு பார்வையுடன் கோல்பிங் குடும்பங்களுக்கு சிறுதொழில் செய்ய 29-07-2025 அன்று வழங்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு?
25. மிட்ஸ் எழுவோம் இயக்கம் சார்பாக 23-01-2025 அன்று தன்னார்வலர்களுக்கான சிறப்பு கூட்டத்தின் சிறப்பு பயிற்சியாளர் யார்?

இதன் வினாக்கள் ஐக்கிய சுடர் இதழ்களிலிருந்து எடுக்கப்பட்டது.
**அக்டோபர் 2024 - டிசம்பர் 2024, ஜனவரி 2025 - மார்ச் 2025, ஏப்ரல் 2025 - ஜூன் 2025, ஜூலை 2025 - செப்டம்பர் 2025**

குறிப்பு :

**சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வுசெய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 2026 பிப்ரவரி 10 தாமதித்த விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தின் விடைகளை எழுதி கத்தரித்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.**

**முகவரி : ஆசிரியர், ஐக்கியச்சுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163, தமிழ்நாடு.**

அன்பு, கருணை, அக்கறை ஆகியவை சமூகத்தை நிலைநிறுத்தும் மூன்று தூண்கள்.




| சென்ற மாத குறுக்கெழுத்து போட்டியின் விடைகள் |
|---|

1. மாதுங்கா
2. கூகுள்
3. காஷ்மீர்
4. நார்வே
5. ஷகுந்தளா தேவி
6. பாஸ்கல் விதி
7. ஆலமரம்
8. வெள்ளை,வெள்ளாடு
9. எலிஸ்காம்ப்ஸ்
10. சுல்தான்கோசன்
11. சீன
12. இஸ்ரோ (ISRO)
13. RBI
14. சீட்டா
15. ஐரிஸ்
16. சென்னை
17. பாறை
18. சாம்பார்சாதம்
19. சோகோ
20. காரட்
21. நீர்
22. மைசூர்
23. திரிபுரா
24. ராஜஸ்தான்
25. பிரான்ஸ்
26. பெங்களூரு

| சென்ற மாத குறுக்கெழுத்துப் போட்டியில் பங்கு கொண்டவர்கள் |
|---|

திருமதி. பிந்து ஜாண், மிட்ஸ் மரியகிரி குழு, சூரியகோடு கிளஸ்டர், களியக்காவிளை

திருமதி. மேழ்சி, சாத்தன்கோடு சுயஉதவிக்குழு, நடைக்காவு கிளஸ்டர், களியக்காவிளை

| சென்ற மாத குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்றவர் |
|---|

திருமதி. பிந்து ஜாண், மிட்ஸ் மரியகிரி குழு, சூரியகோடு கிளஸ்டர், களியக்காவிளை

## வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால், அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### விளம்பரம்

**இதழின் கடைசிப் பக்கம்**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2500
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1250

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2000


**இதழின் கடைசி பக்கத்தின் உட்பக்கம்**
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.750
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1500

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துகள்**
காற்பக்க கட்டணம் Rs.250 அரைப்பக்கத்திற்கு கட்டணம் Rs.500
முழுப்பக்கத்திற்கு கட்டணம் Rs.1000

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம் - கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email:midsmarthandam@gmail.com Website:mids.org.in
Ph : 263390, 295690

சமூக அக்கறை மனித வாழ்வை ஒளிரச் செய்யும் தீபமாகும்.


BTS
FITNESSCLUB
ஆற்றூரில்... ஒரு உலகத்தரம்
வாய்ந்த உடற்பயிற்சிக் கூடம்
BTS FITNESS
Gents & Ladies
பெண்களுக்கென தனி உடற்பயிற்சி
கூடம் அமைக்கப்பட்டுள்ளது.
OUR FACILITIES
STRENGTH TRAINING
CARDIO
AEROBICS
CROSSFIT
PERSONAL TRAINING
DIET & NUTRITION
BODY BUILDING
POWER LIFTING
WEIGHT LOSS
WEIGHT GAIN
Prop & Coach :
T. E. Bright
Cell 9994994367
இதுவரை ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றி
அனைவரும் வருக... ஆரோக்கியம் பெறுக... வாழ்க நலமுடன்...
BTS MEDICAL, Attoor Junction & Chitharal
இவண் BTS FITNESS CLUB, Attoor


With Best Compliments from
SURAJ
constructions
We deals with consultation,
construction and designing of
• Churches • Shrines • Chapels
• Auditoriums • School • Residential buildings
• Shopping complexes • And other buildings
Consulting engineer
K P. Francis Raj
Nellimoottu Palavilai, Palavilai post,
Kollencode. Ph No. 9447395559

# SHALOM TRADERS

Near MSC Church, Manjathoppu, Vallavilai, Kollemcode, Kanyakumari Dist.

**All Kinds of Building Materials**

**Mob: 9698891258,9087247258**

## Our Products

asianpaints

**Pump:** V Guard
**PVC Fittings:** Finolex, Star
**Sanitaryware:** Cera, Johnson
**Hardware:** Garg, Yama
**CP Fittings:** Omco
**Asbittas Sheets:** Everest
**Cement:** Sankar Cement, Ramco Cement
**Steel:** Agni TMT
**Electricals:** Finolex, Lisha, Hifi, Legrand, Crompton

